# பாட்டாளி சிந்தனை

Volume 25 No. 10

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

June 2015

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3




## பாசிசத்தை சோசலிசம் வெற்றி கொண்ட 70வது ஆண்டு விழா

# வெற்றியின் சிற்பி மாபெரும் ஸ்டாலினை நினைவுகூர்வோம்!

*1945* மே 9ம் நாளானது வரலாற்று சிறப்பு மிக்க நாளாகும். 70 ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில்தான் மனித குலத்திற்கு மிகவும் அச்சுறுத்தலாகத் திகழ்ந்த ஜெர்மனியின் பாசிசப் படைகளை கம்பீரமான, தீரமிக்க சோவியத் செஞ்சேனை வீழ்த்தி, பெர்லினைக் கைப்பற்றி, ஜெர்மன் பாராளுமன்ற கட்டிடம் ரெய்ச்ஸ்டாக் உச்சியில் செங்கொடியை ஏற்றிவைத்து, தீய சக்திகளுக்கு எதிரான மனிதகுலத்தின் வெற்றியாக அடையாளப்படுத்தியது. ஜெர்மனியின் கெஸ்டபொ மற்றும் எஸ் எஸ் ராணுவத்தின் கரங்களில் சிக்கி, கடுமையான சித்திரவதைகளுக்கு ஆளான போர்–எதிர்ப்பு ஜனநாயக எண்ணம் கொண்ட ஜெர்மன் மக்கள் உட்பட ஒட்டுமொத்த உலகமும் பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் ஒப்பற்ற சீடரும் மனோதிடமும் தகர்க்க முடியா உறுதியும் விடுதலைக்கான மனிதகுலத்தின் போராட்ட வரலாற்றில் ஒரு உன்னத குணசீலரும் மனித இனத்தின் மிகக் 'கொடிய' எதிரியின் மீதான இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியின் சிற்பியுமான ஸ்டாலினுக்கு மனிதகுலத்தைப் பாதுகாக்க வந்த ரட்சகர் என்று மாபெரும் புகழ்மாலை சூட்டின. அவரது தலைமையில், துணிச்சலான சோவியத் மக்களும் செஞ்சேனையும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் பிற்போக்கு சக்திகளுக்கு எதிரான வெற்றியை பதித்தது.

### சோவியத் சோசலிசத்தை வீழ்த்துவதற்கு பூர்ஷ்வாக்களின் சதி

*1917*ல் சோவியத் சோசலிசப் புரட்சி நடைபெற்றது. அது ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியதோடு மார்க்சிய தத்துவம் சரி என்பதையும் வரலாறு பற்றிய மார்க்சிய ஆய்வு பொய்யாகாது என்பதையும் நிரூபித்தது. மனிதனை மனிதன் சுரண்டுவதிலிருந்து முற்றிலும் விடுபட்ட ஒரு புதிய சமுதாயம், பொருளாதாரம்–அரசியல்–சமூகம்–கலாச்சாரம் என மனிதகுலத்தின் எல்லாம் தழுவிய வளர்ச்சியடைந்த ஒரு புதிய சமுதாயம் வந்துவிட்டதை இந்த ஒட்டுமொத்த உலகமும் உணர்ந்தது. மார்க்சிசம்–லெனினிசத்தை உய்த்துணர்ந்து அவரவர் சொந்த மண்ணில் புரட்சிகரப் போராட்டங்களைக் கட்டியெழுப்ப உலகமுழுவதுமுள்ள உழைக்கும் வர்க்கத்திற்கு உத்வேகமூட்டியது. காலனி மற்றும் அரைக்காலனி நாடுகளின் சுதந்திரத்தை நேசிக்கும் மக்கள் தங்களது நாட்டை ஏகாதிபத்திய–நிலப்பிரபுத்துவ சக்திகளின் பிடியிலிருந்து விடுவிக்கவேண்டும் என்ற ஆற்றலை அளித்தது. சோவியத் புரட்சியானது பிற்போக்குத்தனமான உலக ஏகாதிபத்திய–முதலாளித்துவங்களுக்கு கிலியை உண்டாக்கியது. எனவே, சோவியத் சோசலிசத்தை வீழ்த்தி, தகர்ப்பதற்காக ஏகாதிபத்திய–முதலாளித்துவ சக்திகள் அனைத்து விதமான சதிகளிலும் ஈடுபட்டனர். சோவியத் யூனியனை அனைத்து திசைகளிலிருந்தும் ராணுவத்தால் முற்றுகையிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உள்நாட்டிற்குள் பிரச்சினைகளையும் குழப்பங்களையும் தூண்டிவிடுவதற்காக ஒற்றர்கள் அனுப்பப்பட்டனர். எதிர்புரட்சி செய்வதற்கு அதிகாரத்திலிருந்து தூக்கியெறியப்பட்ட ரஷ்ய பூர்ஷ்வாக்களுக்கு அனைத்துவிதமான உதவிகளையும் தாராளமாக வழங்கினர். ஆனால்

தொடர்ச்சி 5ம் பக்கம்

## தேசிய சுகாதார வரைவுக் கொள்கை 2015

# மக்களின் சுகாதாரத்தை முற்றிலும் தனியார்மயம்–வியாபாரமயம் ஆக்குவதற்கான திட்டம்

பிஜேபி தலைமையிலான மத்திய அரசாங்கம் தன்னுடைய வலைதளத்தில் தேசிய சுகாதார வரைவுக் கொள்கை ஒன்றை சுற்றுக்குவிட்டு ஆலோசனைகளையும் விமர்சனங்களையும் வரவேற்றுள்ளது. 'அனைவருக்கும் நலவாழ்வு' என்பதில் மிகுந்த அக்கறை இருப்பதைப்போல் காட்டிக்கொண்டாலும், உண்மையில் இந்த வரைவுக் கொள்கை ஒட்டுமொத்த சுகாதாரத் துறையையும் தனியார்வசம் ஒப்படைத்து, அதனை வணிக அடிப்படையில் நடத்துவதை இறுதி நோக்கமாகக் கொண்டுள்ளது. கல்வி, மின்சாரத்துறையைப் போலவே சுகாதாரத்துறையும் வெறும் ஒரு சரக்காக ஆக்கப்பட்டுள்ளது. இக்கொள்கையின் சில முக்கிய அம்சங்களைப் பற்றிய ஒரு பார்வை நம்முடைய இக்கருத்தை நன்கு விளக்கும்.

### முதலாளித்துவ இந்தியாவில் சுகாதாரத்துறை

நாட்டில் சுகாதார நலன் எவ்வளவு மோசம் என்பதை பகுத்தறியும் திறனுள்ள எவரும்அறிவர். விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய பணக்காரர்கள் சொகுசான தனியார் மருத்துவமனைகளில் அதிநவீன சிகிச்சையை அனுபவித்துவரும்போது, கிராமப்புற–நகர்புற ஏழைகள், ஓட்டாண்டிகளாகிவரும் நடுத்தர வர்க்கத்தினர் மருத்துவவசதி பெறமுடியாமல் தவிக்கின்றனர். மருத்துவமனைகள் மற்றும் உரிய கட்டமைப்புகள் போதுமான அளவில் இல்லாததாலும் தகுதிவாய்ந்த டாக்டர்களின்மையாலும் மருந்துகள், பரிசோதிக்கும் முறைகள், சிகிச்சை ஆகியவற்றின் கட்டணங்கள் அதிகரித்துக்கொண்டே போவதாலும் அடிப்படை மருத்துவ வசதிகள்கூட அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன.

இவ்வாறு, ஈவிரக்கமற்ற முதலாளித்துவ சுரண்டலினால் தங்களது உயிரை தக்கவைத்துக்கொள்ளக் கூட இயலாமலிருக்கும் நாட்டின் பெரும்பகுதியினருக்கு அடிப்படை சுகாதாரவசதிகூட கிடைப்பதில்லை. இதன் காரணமாக விலைமதிப்பற்ற எண்ணற்ற உயிர்களை நாம் இழந்திருக்கிறோம். மக்களின் எதிர்காலமே முடங்கிப்போயுள்ளது. தாய்–சேய் இறப்பு அதிகரித்தவண்ணமிருக்கிறது.

வளர்ச்சி, முன்னேற்றம் குறித்து பெரும் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் ஒரு நாட்டில், தொற்று நோய்கள் அதிகரித்துவரும் நிலையில் வாழ்வை முடிக்கக்கூடிய எய்ட்ஸ், கேன்ஸர் போன்ற நோய்கள் குறித்து என்னசொல்ல? நவீன நாகரீக, மக்கள்நல அரசு, (Welfare State) தனது குடிமக்கள் அனைவருக்கும் தேவையான மருத்துவ உதவியையும் ஆரோக்கியத்தையும் வழங்கும் கடமையை தனது தோள்களில் ஏற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், சுதந்திர இந்தியாவின் முதலாளித்துவ அரசாங்கங்கள், அது எந்தக் கட்சியால் நடத்தப்பட்டாலும் இக்கடமையை நிறைவேற்ற எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

சுதந்திரம் பெற்றவுடன் மக்கள் நிர்ப்பந்தத்தின் காரணமாக, அரசாங்கத்தின் சார்பில் சில மருத்துவ மனைகளும் ஆரம்ப சுகாதார மையங்களும் நிறுவ சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

நமது நாட்டின்தலைசிறந்த தியாகிகள் மற்றும் விடுதலை வீரர்களின் கனவாகவிருந்த "கருவறை முதல் கல்லறை" வரை அனைவருக்கும்

தொடர்ச்சி 2ம் பக்கம்

# பெரும்பான்மை மக்களுக்கு அடிப்படை சுகாதார உரிமை மறுக்கப்படுகிறது

1ம் பக்கத் தொடர்ச்சி

சுகாதாரவசதி அளித்திட முழுமுயற்சிகள் எடுக்கப்படவேண்டுமென்ற போரே கமிட்டியின் **(1943–1946)** பரிந்துரைகள் யாவும் காற்றில் விடப்பட்டன. நாட்கள் செல்லச்செல்ல அரசாங்க மருத்துவமனைகள் மற்றும் ஆரம்பச் சுகாதார மையங்கள் மூலம் உரிய சுகாதார–மருத்துவ வசதிகள் வழங்கிடும் கடமை புறக்கணிக்கப்பட்டு விட்டது.

1990களில் உலகமயம், தாராளமயத்தை இந்தியா தழுவிக்கொண்டபின் இப்போக்கு பரந்து விரிந்தது. அதுமுதற்கொண்டு, சுகாதாரத்துறையில் தனியார்மய களியாட்டம் கோரதாண்டவமாடி வருகிறது. மத்தியிலும் மாநிலத்திலும் எந்த பூர்ஷ்வா அல்லது குட்டி பூர்ஷ்வா கட்சி ஆட்சியிலிருந்தாலும் அரசாங்க மருத்துவமனைகளின் பல்வேறு செயற்பாடுகளை எடுத்துக்கொள்ள பொது–தனியார்கூட்டு (பிபிபி) எனும்பெயரில் தனியாருக்கு தாராள அனுமதி வழங்கப்பட்டது.

உலக முதலாளித்துவம்–ஏகாதிபத்தியத்தின் ஒன்றிணைந்த இந்திய முதலாளித்துவ அமைப்பானது மேலும்மேலும் பிற்போக்கானதாக, ஊழல் மலிந்ததாக உருவாகி, அரசாங்கங்களாலும் ஆளும் கட்சியின் தலைவர்களாலும் எவ்வளவுதான் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டாலும் சுகாதாரத் துறையின் ஒவ்வொரு மூலைமுடுக்கெங்கும் ஊழல் ஊடுறுவியுள்ளதை மருத்துவமனைகளுக்குச் செல்லும் சாமானிய மனிதன் கண்கூடாக கண்டு வருகிறான். அரசு மருத்துவமனைகளில் நிர்வாகத்தின் ஆசிபெற்ற தரகர்களின் செல்வாக்கு கொடிகட்டிப்பறக்கிறது என்று சொன்னால் மிகையில்லை; அத்தரகர்கள் நோயாளிகளிடமிருந்து முறைகேடாகப் பணத்தை பறித்துவருகின்றனர்.

இவ்வாறு மருத்துவ சிகிச்சைப்பெற இந்திய உழைக்கும் மக்கள் பெரும்பாடுபடுகின்றனர். பணக்காரர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் மட்டுமே மருத்துவ வசதி; பணவசதி இல்லாத மக்கள் மருத்துவ சிகிச்சை ஏதுமின்றி செத்துமடிவதைத் தவிர வேறுவழியில்லை என்ற நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டனர்.

### தேசிய சுகாதார வரைவுக் கொள்கை : நிதி ஒதுக்கீடு

இப்பின்னணியில் தேசிய சுகாதார வரைவுக் கொள்கை – **2015**ன் முன்மொழிவுகள் குறித்து ஆராய்வோம். சுகாதார கட்டமைப்புக்களையும் விரிவான சுகாதார சேவையையும் மேம்படுத்திட நிதி ஆதாரமே முக்கியமாகும் என இவ்வரைவுக் கொள்கையில் அரசாங்கம் ஒத்துக்கொண்ட போதிலும் ஜிடிபி (Gross Domestic Production)யில் வெறும் **1.2%** மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. **2.5%**வரை மட்டுமே நிதியை அதிகரிப்பது குறித்து பேசுகிறது. அதையும்கூட அடைவதற்கான வரையறுக்கப்பட்ட இலக்கு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. மாறாக, சுகாதாரம் மற்றும் குடும்ப நலனுக்கான ஒதுக்கீடானது சென்ற ஆண்டின் **35,163** கோடியிலிருந்து **29,653** கோடிக்கு குறைக்கப்பட்டுள்ளது. **2.5%** ஒதுக்குவது குறித்துப் பீற்றிக்கொண்டாலும் பிறநாடுகளில் ஒதுக்குவதுடன் ஒப்பிட்டால் இது மிகமிக குறைவானதாகும். வளரும் நாடுகளில் சுகாதாரத்திற்கு ஜிடிபியில் குறைந்த பட்சம் **5%**மாவது ஒதுக்கவேண்டும் என்பது உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் ஐநாவின் (UNO) வழிகாட்டுதலாகும்.

நிதிப் பற்றாக்குறை என அரசாங்கம் கூறினாலும் உண்மை அதற்கு எதிராக இருக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு தள்ளுபடிகள், விலக்குகள், சலுகைகள் என தொழில் குழுமங்களுக்கும் ஏகபோகங்களுக்கும் ரூ. 40 லட்சம் கோடிகளை அரசாங்கம் அள்ளி வழங்கியுள்ளது. கடந்த நவம்பரில் ஊடகங்கள் வெளியிட்டதன்படி தொழிற் குழுமங்கள், முதலாளிகள் வங்கிக்கு கட்டத் தவறிய வராக்கடன் ரூ. 6 லட்சம் கோடிகளாகும்.

முடிக்கப்படாத அல்லது பாதியில் கைவிடப்பட்ட திட்டங்களில் செய்யப்பட்ட முதலீடானது ஜிடிபியில் **8.3%** என பொருளாதார ஆய்வறிக்கை' **2015** ஒத்துக்கொண்டுள்ளது. வெறும் பயணத்திற்காகவே பொது கருவூலத்திலிருந்து ரூ.**317** கோடிகளை பிஜேபி அரசாங்கம் செலவழித்துள்ளது. **2**ஜி ஸ்பெக்ட்ரம் மெகா ஊழல் முறைகேடானது சுமார் **1.76** லட்சம் கோடி வருவாய் இழப்பை அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது. **2004–2009** ஆண்டிற்கிடையில் ஏலம் எதுவுமின்றி வணிக நிறுவனங்களுக்கு **155** நிலக்கரி சுரங்கங்களை ஒதுக்கீடு செய்ததில் **10.67** லட்சம் கோடி தேவையற்ற வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக மத்திய தணிக்கையாளரின் வரைவு அறிக்கை கூறுகிறது. இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் **28.30** லட்சம் கோடி கறுப்புப்பணம் உருவாவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கார்ப்பொரேட் முதலாளிகளிடமும் வங்கிக்கடனை ஏமாற்றுபவர்கள், பொதுப் பணத்தை மோசடி செய்பவர்கள், கணக்கில் வராத பணத்தை வைத்திருப்பவர்களிடமும் தாராளமனப் பான்மையுடன் அரசாங்கம் நடந்துகொள்கிறது. ஆனால், மக்களின் சுகாதாரத்திற்கு நிதி ஒதுக்கும் விஷயத்தில் அரசாங்கம் கண்டிப்பானதாகவும் கஞ்சத்தனமிக்கதாகவும் தன்னைக் காட்டிக் கொள்கிறது.

### தேசிய சுகாதார வரைவுக் கொள்கை : தனியார்மயத்தை அதிகரிக்கிறது

அரசாங்க கட்டமைப்புக்களின் மூலம் மருத்துவ சேவை வழங்குவதில் உள்கட்டமைப்பு மற்றும் பணியாட்களின் போதாமை குறித்து பார்ப்போம். சுதந்திரம் அடைந்து 68 ஆண்டுகளுக்குப்பின்பும் இந்திய பொது சுகாதார தரத்தை (IPHS) எட்டுவதில்கூட நாடு மிகவும் பின்தங்கி இருப்பதாக இக்கொள்கை கூறுகிறது.

இவ்விரு அம்சங்களிலுமுள்ள அரசாங்க கட்டமைப்பின் குறைபாடுகளை களைவதற்கு பதிலாக தனியார் அல்லது அரசுசாரா மருத்துவமனைகளை சார்ந்திருக்க அறிவுறுத்துகிறது. பல்வேறு சுகாதார சேவைகளில் **100%** அந்நிய நேரடி முதலீட்டிற்கான சட்டப்பிரிவுகள் இருப்பதையும் இக்கொள்கை சுட்டிக்காட்டுகிறது. அரசு துறைகளுடன் கூடவே அரசுசாரா அமைப்புக்கள், லாபநோக்கமற்ற அமைப்புக்கள் உட்பட தனியார் ஒப்பந்ததாரர்கள் மூலம் அனைத்து குடிமக்களும் சுகாதார சேவையைப் பெற்றுக்கொள்ள அறிவுறுத்துகிறது இக்கொள்கை.

மக்கள் ஏற்கெனவே கடும் வறுமையிலும் துயரத்திலும் உழன்று வருகையில் மிகஅதிக கட்டணம் வசூலிக்கும் தனியார் மருத்துவமனைகளுக்கு செல்ல அம்மக்களுக்கு அறிவுரை கூறுவதைக் கண்டால் ஒரு கழுதைக்குக்கூட சிரிப்புவரும். இவ்வரைவுக் கொள்கையானது உயர்மட்ட சிகிச்சைபெற மக்கள் தனியார் மருத்துவ மனைகளுக்கு செல்லவேண்டுமென வலியுறுத்தி, அத்தகைய தனியார், தனியார் மருத்துவத்துறைக்கு நேரடி உதவிகள் செய்யவேண்டுமென முன்மொழிவதன் மூலம், தனியார் மருத்துவத்துறை வளர்ந்து கொள்ளைலாபமீட்டுவதை உத்திரவாதப்படுத்துகிறது.

கூடவே, மருத்துவ சேவையளிக்கும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் உட்பட பொது மருத்துவ வசதிகள்யாவும் முழுமையான அலட்சியத்தாலும் நிர்வாக குளறுபடியாலும் குறைவான நிதிஒதுக்கீட்டாலும் மறைமுகமாக பெரும் அபாயத்தில் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதுமட்டுமின்றி, ஆரம்ப சுகாதார மையங்களை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ தனியார் ஏஜென்ஸிகளிடம் அவுட்சோர்ஸ் செய்தல் அல்லது ஒப்படைத்தல் என்பதெல்லாம் தனியார் அமைப்புக்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் பொது அமைப்புக்களை மெல்லமெல்ல அழித்தல் என்பதற்கான தெளிவான அறிகுறிகளாகும்.

இவ்வாறு முழு சுகாதாரத்துறையையும் உள்நாட்டு ஏகபோகங்கள் – பன்னாட்டு கம்பெனிகளுக்கு தாரைவார்த்து, அரசாங்கத்தின் பங்கை வெறும் மேற்பார்வையாளராக குறைப்பதற்கான சதித்திட்டமே இது என்பது நன்கு தெளிவாகிறது. அரசு கஜானாவிலிருந்து பணத்தை எடுத்து தனியார் சுகாதார கார்ப்பொரேட்டுகளின் பையை நிரப்பி, சுகாதாரத்துறையை ஒரு பணங்கொழிக்கும் வணிகமாக மாற்றும் அனைத்து சாத்தியக்கூறுகளும் உள்ளன. மக்களுக்கு சுகாதாரத்தைப் வழங்கும் தனது கடமையிலிருந்து விலகி, அதற்கு பதிலாக அரசு கஜானாவிலிருந்து தாராள நிதியை வாரிவழங்கி வேகமாகப் பெருகிவரும் தனியார் மருத்துவ துறையின் வளர்ச்சிக்கு வழிகோலும் வேலையை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் நோக்கங்கொண்டதே இவ்வரைவுக் கொள்கை. **1983**ம் ஆண்டில் தேசிய சுகாதாரக் கொள்கையின் (NHP) மூலம் சுகாதாரத்துறையை தனியார்மயம், வியாபாரமயம், சரக்குமயமாக்குவதற்கான விதை தூவப்பட்டு, முதலாளித்துவ உலகமயத்தின் வீச்சில் **2002**ல் இரண்டாவது தேசிய சுகாதாரக் கொள்கையின் மூலம் அதன் மடைக்கதவுகள் முற்றிலும் திறந்துவிடப்பட்டது. தற்போது **2015**ல் இந்த வரைவுக் கொள்கையை அமுல்படுத்துவதன் மூலம் இந்த வட்டம் முழுமையடைகிறது.

மற்றொரு அபாயகரமான முன்மொழிவும் இருக்கிறது. நவீனமயம், நுகர்வோர்களின் அத்தியாவசிய தேவை என்றபெயரில் இன்சூரன்ஸ் துறையில் தனியார் கம்பெனிகள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டது என்பதை நாமறிவோம். அந்நிய இன்சூரன்ஸ் நிறுவனங்கள் இந்திய இன்சூரன்ஸ் துறையில் நுழைவதற்கு ஏதுவாக அந்நிறுவனங்களை கவர்ந்திழுப்பதற்காக இன்சூரன்ஸில் அந்நிய நேரடி முதலீட்டின் உச்சவரம்பை **49%** அரசாங்கம் உயர்த்தியது.

அந்நிய முதலீடுகள் பெரும்பணம் அள்ளுவதற்கு வசதியாக இன்சூரன்ஸ் துறையை விரிவாக்க அரசாங்கம் ஒரு தீர்மானகரமான நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இதை செயல்படுத்த ஏற்கெனவே கடந்த பட்ஜெட்டில் எண்ணற்ற முன்மொழிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அனைவருக்கும் நலவாழ்வு எனும்பெயரில் 'சுகாதார தகுதி அட்டை'யை அறிமுகப்படுத்துவதன் மூலம் சுகாதாரத்துறையை ஒட்டு மொத்தமாக காப்பீட்டு துறையுடன் இணைப்பது குறித்து இக்கொள்கை பேசுகிறது.

'சுகாதார வரி' எனும்பெயரில் ஒரு குறிப்பிட்ட பிரிமியத்தைக் (முன்பணத்தைக்) கட்டியாக வேண்டும், மேலும் நேரடிவரி செலுத்துவோரனை வரும் 'சுகாதார செஸ்' வரியும் கட்டியாகவேண்டும். தேசிய, மாநில சுகாதார காப்பீட்டுத்திட்டங்கள் அனைத்தையும் ஒற்றைக் காப்பீட்டுத் திட்டமாக்கிட வேண்டியிருக்கிறது. எனவே தனித்தனிக் கூறுகளாய் இருக்கும் நிதி ஒன்றுகுவிக்கப்படவேண்டும். அப்போதுதான் சுகாதார அமைச்சகம் இன்சூரன்ஸ் வாயிலாக மருத்துவவசதி பெறுவது அல்லது தனியார் மற்றும் பொதுத்துறைகளிடம் நேரடியாய் இலவச மருத்துவவசதி பெறுவது போன்ற மாறுவழிகள் மூலம் ஒரு நோயாளிக்கான செலவு எவ்வளவாகும் என ஒப்பீட்டளவில் ஒப்பிட்டுப் பார்க்கமுடியும் என்கிறது.

இவ்வாறாக, அரசானது பொதுமக்கள் பணத்தை தனியார் மருத்துவமனைகளுக்கு லாபமாக வழங்கவும் அதற்காக நோயாளிகள் தனியார் மருத்துவமனைகளை நாடிச் செல்லவேண்டிய சூழ்நிலையையும் உத்திரவாதப்படுத்துகிறது. அவ்வாறு நோயாளிகள் செலவு செய்தபின் தாங்கள் செலவுசெய்த பணத்தை மேற்கூறிய அட்டை வாயிலாக திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்கிறது.

மைக்கைல் மூர் என்பவரால் தயாரிக்கப்பட்ட 'சிக்கோ' என்ற ஆவணப்படத்தில் யுஎஸ்ஏ (அமெரிக்கா)வில் இன்சூரன்ஸ் வழியில் மருத்துவ சிகிச்சைபெறும் முறை குறித்தும் அதனால் அமெரிக்க குடிமக்கள் படும் அவதிகுறித்தும் பிரமாதமாக சித்தரிக்கப்பட்டுள்ளதைப்பற்றி இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானதாகும், காப்பீடு செய்த நபர்கள் எவ்வாறு சிகிச்சை மறுக்கப் படுகிறார்கள், லாபவெறிகொண்ட காப்பீட்டு நிறுவனங்களும் மருந்து கம்பெனிகளும் தனியார் மருத்துவமனைகளும் மக்களை எவ்வாறு ஏமாற்றுகின்றன என்பதை ஆதாரத்துடன் இப்படத்தில் மூர் காட்டியிருக்கிறார். இதன் விளைவாக காப்பீடு செய்த இன்சூரன்ஸ் சந்தாதாரர்கள் எவ்வாறு கடனாளிகளாகின்றனர், எவ்வாறு நேசத்திற்குரியவர்களை இழக்கின்றனர் எனவும் சித்தரித்திருக்கிறார்.

யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகளின் அரசாங்கமானது தனியார் சுகாதார கார்ப்பொரேட்டுகளுக்கு துணைசெய்யும் கொள்கைகளை எவ்வளவு வெளிப்படையாகவே கடைபிடிக்கிறது, அதீத லாபத்திற்காக முதலாளித்துவ உடைமையாளர்கள் மக்களின் சுகாதார நலனை எவ்வாறு தியாகம் செய்கிறார்கள் என்பதையும்கூட நன்கு இப்படத்தில் விளக்கியிருக்கிறார். சுகாதாரத்துறை கார்ப்பொரேட்டுகளின் ஆதாயத்திற்காக ஊழல் அரசியல்வாதிகள் எவ்வாறு லஞ்சம் பெறுகிறார்கள் என்பதையும் இப்படம் நன்கு விளக்கும். 9/11 தாக்குதலின்போது அங்கு தன்னார்வத்துடன் உதவச் சென்றதால் நோய் பாதித்த தொண்டர்கள் மருத்துவக் காப்பீடு மறுக்கப்பட்டு சோசலிச கியூபாவிற்கு சென்று உயர்தர சிகிச்சையும் இலவசமாக முறையான மருத்துவமும் பெற்று நன்கு குணமடைந்ததையும் அப்படம் காட்டுகின்றது. யுஎஸ்ஸில் நிலவும் இக்கேடுகெட்ட நடைமுறையை இந்தியாவிலும் கொண்டுவர இப்புதிய கொள்கை விரும்புகிறது.

தொடர்ச்சி 3ம் பக்கம்

# சுகாதாரத்துறையை முழுமையாக தனியார்மயமாக்குவதன் மூலம் மருத்துவ நீதிநெறிகளுக்கு மக்கள் நலனுக்கு சவக்குழி தோண்டப்படுகிறது

2ம் பக்கத் தொடர்ச்சி

### தேசிய சுகாதார வரைவுக் கொள்கை : மனித சக்தி

முறையான சுகாதார தேவையை பூர்த்திசெய்ய தகுதிவாய்ந்த மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட போதுமான எண்ணிக்கையில் சுகாதாரப் பணியாளர்கள் தேவை. ஆயுஷ் (Ayurveda, Yoga and Naturopathy, Unani, Siddha and Homoeopathy - AYUSH) டாக்டர்களை கணக்கில் எடுத்துக் கொண்டால் மக்கட்தொகை விகிதாசாரப்படி 1 : 700 என தேவைக்கு மிகக்குறைந்த அளவில் இருக்கிறார்கள். சரியான திட்டமிடல், தேர்ந்தெடுத்தல் மற்றும் விநியோகக் கொள்கையில்லை. இதனை மூடிமறைக்க நாட்டின் பெரும்பகுதியில் தகுதி வாய்ந்த மருத்துவர்களின் பற்றாக்குறை நிலவுகிறது என்ற பழைய பல்லவியே திரும்பத்திரும்ப பாடப்படுகிறது.

பெரும்பாலும் தனியார்துறையில் பெருகிவரும் மருத்துவ, துணைமருத்துவ கல்லூரிகளால் மருத்துவர்களை உருவாக்கும் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது என அரசாங்கம் வாதிடுகிறது. யதார்த்த பூர்வமான அணுகுமுறையைக் கைக்கொண்டாலொழிய போதுமான மனிதசக்தியை உருவாக்கும் இப்பிரச்சினையை இதனால் மட்டுமே தீர்க்க முடியாது. ஏற்கெனவே பெரும்பாலான தனியார் கல்லூரிகளில் சேர்த்தல், தேர்வை முடித்தல், பட்டம் பெறுதல் என்ற அனைத்தும் பணத்தால் மட்டுமே வழங்கப்படுகிறது. இயற்கையாகவே, மருத்துவப் படிப்பின் தரம் பாதிக்கப்படுகிறது. பட்டம்பெற்று வெளியே வரக்கூடியவர்களுக்கு எவ்வித தொழிற் தேர்ச்சியும் இருப்பதில்லை. அதுமட்டுமல்ல, பெரும்பணம் செலவழித்து பட்டம் பெற்றபின் வட்டியும் முதலுமாக தங்கள் தொழிலில் அப்பணத்தை மீட்டிட முயற்சிசெய்கின்றனர்.

இவ்வாறு, சமூக நீதிநெறியின் அங்கமாக விளங்கும் மருத்துவ நீதிநெறியின் உன்னதமும்கூட வேகமாக அழிந்துவருகிறது. மருத்துவ கல்வியை மேலும் சரக்குமயமாக்குவதென்பது மருத்துவ நீதிநெறியின் உன்னதத்தை நடைமுறையில் மேலும் அழிக்கும். லாபவெறி ஏகபோகங்களும் அசுர கார்ப்பொரேட்டுகளும் மருத்துவ கல்வியில் தாங்கள் இட்ட முதலீட்டுக்கு ஈடாக அதிகபட்ச லாபத்தை திரும்பப்பெறுவதில்தான் குறியாக இருப்பார்களே தவிர சமூக மதிப்புக்கள், கடப்பாடு, மருத்துவ நீதிநெறி, தொழில்தர்மம் பற்றியெல்லாம் கவலைப்படமாட்டார்கள். இதன்விளைவாக சமூகத்தில் ஏற்படும் பேரழிவு விளைவுகளை மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள், அனைத்துவகைப்பட்ட சுகாதார ஊழியர்கள், குடிமக்கள் அனைவரும் எதிர்கொண்டாகவேண்டும்.

மத்திய–மாநில அளவில் ஆஷா (ASHA-Accredited Social Health Activists) முதல் மருத்துவர்கள் மற்றும் உயர்மட்ட சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு பொது சுகாதார சேவையை நடத்துவதற்கு பல்வேறு வகைப்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் தேவை. இப்புரிதலின் அடிப்படையில் சுகாதாரப் பணியாளர் மனித சக்தியினை வளர்த்தெடுப்பது மிகவும் சிக்கலான விஷயம் என்பதை இந்த வரைவுக் கொள்கையை தீட்டியவர்கள் ஏதோ காரணங்களுக்காக வெளிப்படையாக தங்கள் அறியாமையை பிரதிபலிக்கின்றனர்.

கட்டமைப்பு வசதிகளின்மை, குறைந்தபட்ச பரிசோதனை கருவிகள்கூட பற்றாக்குறை ஆகியன தகுதிவாய்ந்த டாக்டர்களை கிராமப்புறங்களுக்கு செல்வதை தடுக்கிறது என்பது அனைவரும் அறிந்ததே. பல்வேறு தருணங்களில் பல்வேறு அரசாங்கங்கள் CHG,TD, VHSC, தொடர்பு நபர்கள், வெறுங்கால் மருத்துவர் போன்ற சுகாதாரப் பணியாளர்களை அறிமுகப்படுத்தின. இவற்றாலெல்லாம் விளைந்தது என்ன என்பது அனைவரும் அறிந்ததே. இந்த பணியாளர்கள் (Health Cadre) எவருக்கும் தேவையான பொறுப்புக்களை நிறைவேற்ற உரிய பயிற்சி அளிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்படவில்லை. இவ்வாறு அனைத்து முயற்சிகளும் வீணில் முடிந்தன.

தற்போது 'பாதுகாப்பான தாய்மை' திட்டத்தின் கீழ் மருத்துவமனைக்கு வந்து மகப்பேறு பெற்றுக் கொள்வது, நோய் எதிர்ப்புத்திறன் பெற கிளினிக்குகளுக்கு குழந்தைகளை வரவழைப்பது, குடும்பக் கட்டுப்பாடு அறுவைசிகிச்சையை ஊக்குவிப்பது, முதலுதவி கொடுப்பது, பிறப்பு, இறப்பு, நோய் குறித்த புள்ளிவிபரங்களை பராமரிப்பது, கிராமப் புறங்களை தூய்மைபடுத்தி முன்னேற்றுவது போன்ற பணிகளை ஆஷா மேற்கொள்கிறது. ஆனால் அதற்கான சொற்ப ஊதியமே அவர்களுக்குத் தரப்படுகிறது.

நோய் எதிர்ப்புத்திறன் முதற்கொண்டு சுகப் பிரசவம், நோய்களுக்கான பொது மருத்துவம், எவ்வித தொற்றுநோய் பரவுவதையும் கட்டுப் படுத்துதல் உள்ளிட்ட மிகப்பெரிய பொறுப்புக்களை ஆஷா பணியாளர்களிடம் இவ்வரைவுக் கொள்கை எதிர்பார்க்கிறது. அவர்கள் நீண்ட காலமாக கோரிக்கைவைத்து போராடிவரக்கூடிய போதுமான பயிற்சி அளிக்கத் தேவையான ஏற்பாடுகளை செய்வது, உரிய சம்பளம் மற்றும் தேவைகளுடன் சுகாதார ஊழியர்களை நிரந்தரப் பணியாளர்களாக அங்கீகரிப்பது குறித்தெல்லாம் இவ்வரைவுக் கொள்கை வாயே திறக்கவில்லை. எனவே கிராமப்புற ஏழைப்பெண்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஆஷா பணியாளர்களிடம் இப்பெரும் உயர்மட்ட பொறுப்புக்களை அளிப்பது நியாயத்திற்கும் யதார்த்தத்திற்கும் மக்கள் நலனிற்கும் எதிரானதாகும்.

### ஆயுஷ் (AYUSH) டாக்டர்களை முறையாக பயன்படுத்திக் கொள்ளுதல்

ஆயுஷ் டாக்டர்களின் தலைமையின்கீழ் தடுப்பு மற்றும் சுகாதார மேம்பாட்டு அம்சங்களை மேற் கொள்வது குறித்து இவ்வரைவு கொள்கை முன்மொழிகிறது. ஆயுஷ் என்பது அலோபதி மருத்துவம் சாராத இந்திய மருத்துவ முறையை குறிக்கும் ஒரு சொல்லாகும். ஆயுர்வேதா, யோகா, யுனானி, சித்தா, ஹோமியோபதி ஆகியவற்றை உள்ளடக்கிய இந்திய மருத்துவ முறைகளுக்கான ஒரு துறையாக 1995 மார்ச் மாதம் இது உருவாக்கப்பட்டது.

பல்வேறு தேசிய நோய் கட்டுப்பாட்டு திட்டங்களும் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் முறைகளும் நவீன விஞ்ஞானபூர்வ மருந்து பரிசோதனையின் அடிப்படையில் நோய் முன்தடுத்தல் எனும் சுகாதாரநலன் அடிப்படையில் உருவாக்கப் பட்டதாகும் என்பது அனைவரும் அறிந்த விஷயமாகும். சுகாதார நலனின் முன்தடுப்பு மற்றும் மேம்பாட்டு அம்சங்களெல்லாம் நவீன விஞ்ஞானபூர்வ கோட்பாடுகளை சார்ந்திருக்கிறது, இத்துறையில் முறையான நிபுணத்துவம் பெற்றிராத ஆயுஷ் டாக்டர்களிடம் பணியை ஒப்படைப்பது குறித்த இம் முன்மொழிவானது புத்திசாலித்தனமற்றதாகும்.

ஆயுஷை மேம்படுத்த பொது முதலீட்டை அதிகரிக்கப் போவதாகவும் இந்திய மருந்துமுறையும் நவீன விஞ்ஞானமும் ஒருங்கிணைந்த் பாட பிரிவுகள் துவக்கப்படும் எனவும் பிஜேபி தனது தேர்தல் அறிக்கையில் கூறியது. பின் 9–11–2014ல் அத்துறையானது தனியான ஒரு அமைச்சகமாக உயர்த்தப்பட்டது.

ஆனால் முறையான மதிப்பீடு, ஆராய்ச்சிகள், ஆயுஷ் முறையின் பயன்பாடு மற்றும் விஞ்ஞான பூர்வமான ஒன்றிணைப்பிற்கான உரிய நிதி வழங்கும் தீர்மானகரமான திட்டம் எதையும் அறிவிக்கவில்லை. இவ்வாறு, காலங்கடந்த நடைமுறையை நவீன மருத்துவ விஞ்ஞானத்துடன் ஒருங்கிணைக்கும் தேவையை இவ்வரைவுக் கொள்கை அலட்சியப்படுத்தியது. விளைவாக விஞ்ஞானத்திற்கு புறம்பான, பகுத்தறிவுக்குப் புறம்பான பாரம்பரியம் மற்றும் நாட்டு மருந்துவத்திற்கு அழுத்தம் தரப்படும். சுகாதாரப் பிரச்சினைகளை தீர்க்க விஞ்ஞானபூர்வ அணுகுமுறையை அடைய இது உதவிசெய்யாதது மட்டுமின்றி, மூடநம்பிக்கைகள், காலவதியான சிந்தனைகள், முறைகள், அறிவுக்குப் புறம்பான கருத்துக்கள் மற்றும் மந்திர தந்திரங்கள் ஊக்கவிக்கப்படும்.

இப்படிப்பட்ட நிலைமையில் ஆயுஷ் டாக்டர்களின் தலைமையின் கீழ் தடுப்பு மற்றும் சுகாதார மேம்பாட்டு அம்சங்களை மேற்கொள்ளும் இவ்வரைவுக் கொள்கையின் முன்மொழிவுகள் மக்களின் சுகாதாரத்தை அடியோடு அழித்துவிடும். சுகாதார நலனை விஞ்ஞானபூர்வமாக கையாளுவதற்கு நோய் உருவாகும் சூழ்நிலை குறித்த விஞ்ஞானபூர்வ கோட்பாடுகளின் முறையான அறிவுடன் ஒரு எம்பிபிஎஸ் மருத்துவரின் தலைமையிலாவது குறைந்தபட்சம் அந்த ஆயுஷ் மருத்துவர் பணிபுரியவேண்டும். ஆயுஷ் மருத்துவர்களும் பிற பணியாளர்களும் ஒருங்கிணைந்த குழுவின் முக்கிய உறுப்பினர்களாக இருக்க வேண்டும். இவ்வாறு, எம்பிபிஎஸ் டாக்டருக்கு மாற்றாக இருப்பதற்கு மாறாக துணைபுரிபவராக இந்த ஆயுஷ் நாட்டு மருத்துவ டாக்டர்கள் பங்கு இருக்கும். ஆயுஷ் டாக்டர்களை உபயோகப் படுத்தவும் ஈர்த்துக்கொள்ளவுமான சிறந்தவழி இதுவேயாகும். இதுபோன்ற முயற்சிகளெல்லாம் சீனா, வியட்நாம், வடகொரியா, கியூபா போன்ற நாடுகளில் மிக வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்டன. எனவே, இந்தியாவிலும்கூட அவ்வாறு வெற்றிகரமாக செய்திடமுடியும்.

நம்நாட்டில் குறிப்பாக பரந்துபட்ட கிராமப் புறங்களில் உகந்த சுகாதாரச் சிகிச்சைக்கான வசதிகள் இல்லாததன் காரணமாக, கிராமத்து வைத்தியர் அல்லது போலி டாக்டர்கள் என்றறியப் பட்ட தகுதியில்லாத, பதிவுசெய்யப்படாத உள்ளூர் மருத்துவர்களை நம்பி இருக்கவேண்டிய நிலைக்கு ஆதரவற்ற கிராமப்புறமக்கள் தள்ளப்படுகிறார்கள். NSSOவின்படி 40% தனியார் வெளி நோயாளிகள் இவர்களால்தான் சேவையளிக்கப் படுகிறார்கள் என்பதை இவ்வரைவுக் கொள்கை ஒத்துக்கொள்கிறது. நகரத்தின் சில பகுதிகளிலும் அப்படிப்பட்ட கிராமப்புற மருத்துவர்களைப் போல இருக்கிறார்கள்.

நிர்வாகத்தால் அவ்வப்பொழுது இந்த தகுதி பெறாத மருத்துவர்கள் அவமானப்படுத்தப் பட்டாலும் கேலிசெய்யப்பட்டாலும் ஏழை–அடித்தட்டு மக்களுக்கு முதலுதவி மற்றும் ஆரம்பகட்ட மருத்துவ சிகிச்சை போன்றவற்றில் இவர்களும் ஒரு பங்காற்றுகிறார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. அந்த அளவிற்கு அவர்கள் சில சேவைகளை செய்கின்றனர்.

ஆனாலும் இப்போலி அமைப்பு ஒரு முழுமையான சுகாதாரச் சிகிச்சைக்கு ஒரு மாற்றாக ஒரு போதும் விளங்கமுடியாது. இதுபோன்ற தகுதி பெறாத மருத்துவர்களுக்கு உரிய பயிற்சியளித்து, சுகாதாரப் பணியாளர் என்ற பட்டியலுக்குள் அவர்களை கொண்டுவந்து, அரசாங்கத்தின் கண்காணிப்பின்கீழ் வறியவர்களுக்கு மருத்துவ சேவை வழங்கும் பரந்துபட்ட கட்டமைப்புக்குள் அவர்களை அரசாங்கம் ஒருங்கிணைக்க வேண்டிய தேவை இருக்கிறது. ஆஷா ஊழியர்களுக்கு அவர்களும்கூட திறம்பட உதவிசெய்யமுடியும்.

### தேசிய சுகாதார வரைவுக் கொள்கை : உட்கட்டமைப்பு

முறையான சுகாதார சிகிச்சைக்கு உகந்த உட்கட்டமைப்பும் தேவை. துணை சுகாதார மையங்கள் (SHC), ஆரம்ப சுகாதார மையங்கள்(PHC), சமூக

தொடர்ச்சி 4ம் பக்கம்




மே 23–24, 2015 அன்று தேனி மாவட்டத்தில் அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கத்தின் சார்பாக நடைபெற்ற பெண்கள் முகாமில் ஏஐஎம்எஸ்எஸ்–ன் பொதுச் செயலாளர் தோழர் ஜெயலட்சுமி உரையாற்றுகிறார். அதில் கலந்து கொண்டோர்

# வரைவுக் கொள்கை அமுல்படுத்தப்பட்டால் சுகாதாரத்துறை முழுமையாக தனியார்மயம் வியாபாரமயம் ஆகிவிடும்

*3ம் பக்கத் தொடர்ச்சி*

சுகாதார மையங்கள்(CHC) ஆகியவையின் மிகப் பெரிய பற்றாக்குறை நிலவுவது குறித்து இவ்வரைவுக் கொள்கை கடும் மௌனம் சாதிக்கிறது. ஆரம்பச் சுகாதார மையங்கள் அமைப்பின் கீழ் துணை சுகாதார மையங்கள் ஒருங்கிணைக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சுகாதார பணியாளர்கள் இல்லாததால் இத்தகைய மையங்கள் முழுவதும் உபயோகப்படுத்தப்படாமலும் அல்லது அரைகுறையாக உபயோகப்படுத்தப்பட்டும் வருகின்றன. பிறகு எவ்வாறு துணை சுகாதார மையங்கள் ஆரம்பச் சுகாதார மையங்களாக நடத்தமுடியும்?

ஆரம்பச் சுகாதார சேவைகளை அடிமட்டத்திலிருந்து வழங்குவதற்கான மூல ஆதாரமாக விளங்கும் எம்பிபிஎஸ் மருத்துவர்களை பெருமளவில் ஈடுபடுத்துவதற்கான எந்த முன்மொழிவையும் இவ்வரைவுக் கொள்கை வழங்கவில்லை. அடிமட்ட அளவில் மிகஅதிக திறன்பெற்ற டாக்டர்களை நியமிக்கவேண்டும் என்ற போரே கமிட்டியின் வரலாற்றுச் சிறப்புமிக்க பரிந்துரைக்கு மாறாக ஆயுஷ் மருத்துவர்கள், கிராமப்புற செவிலியபணியாளர்கள், சமூக சுகாதார மையங்களிலுள்ள BSc., பட்டதாரிகள் ANM, ASHA பணியாளர்கள் ஆகியோரை நியமிக்கலாம் என இந்த வரைவுக் கொள்கை கூறுகிறது.

இவ்வாறு செய்வது ஆரம்பச் சுகாதார மைய சேவைகளை முறையாக செய்வதற்கான ஓர் தீர்வாக இருக்க முடியாது. சுகாதார சேவைகளை உரிய முறையில் வழங்க நாம் முன்பே கூறியதுபோல் இந்த ஆயுஷ் பட்டதாரிகள் நன்கு திறன்பெற்ற மருத்துவர்களின் கீழ் அவர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த சமூக சுகாதார மையங்கள் இரண்டாம்தர மருத்துவமனைகளாக மாற்றப்படவேண்டும் என இந்த வரைவுக் கொள்கை பரிந்துரைக்கிறது. இது, ஒரு மாயையை உருவாக்குவது தவிர வேறொன்றுமில்லை. இத்தகைய மருத்துவமனைகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் என்னவாக இருக்கவேண்டும்? இரண்டாம்தர மருத்துவமனையானது தனக்கென மருந்துகள், குழந்தைகளுக்கான மருத்துவம், மகளிர் மருத்துவம், மகப்பேறு அறுவை சிகிச்சை, கண்–காது–மூக்கு–தொண்டை, பல், எலும்பு, தோல் பிரிவுகள், நோயுடன் பிறந்த குழந்தை சிகிச்சை பிரிவு முதலிய துறைகளை கொண்டதாக இருக்கவேண்டும். வெறும் 30 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையானது எவ்வாறு இத்துனை சிறப்பம்சங்களை பூர்த்திசெய்யும்?

தற்போதுள்ள சுகாதார நியதிப்படி 1 லட்சம் மக்கள் தொகைக்கு 30 படுக்கைகள் கொண்ட ஒரு சமூக சுகாதாரமையம் செயல்படவேண்டும். உண்மையில் பெரும்பான்மையான சமூக சுகாதார மைய பிளாக்குகள் 2.5 லட்சம் மக்கள்தொகை கொண்ட பகுதிகளில் செயல்படுகின்றன. எனவே, தேவையான அனைத்து வசதிகளுடன் குறைந்த பட்சம் 100 படுக்கைகள் சமூக சுகாதார மையங்களுக்கு தேவை. இல்லாவிட்டால், சமூக சுகாதார மையங்களை இரண்டாம்தர மருத்துவமனைகளாக தரம் உயர்த்துதல் என்பதில் எந்த அர்த்தமும் இல்லை. வெறும் பெயர் மாற்றங்களாக மட்டுமே இவை இருக்கும்.

துணை மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களும் கூட இதைப்போலவே பரிதாபகரமான நிலையிலேயே இருக்கின்றன. எனவே இவற்றையெல்லாம் எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்து இவ்வரைவுக் கொள்கை எதுவும் சொல்லவில்லை. IPHSன் துணை, ஆரம்ப, சமூக சுகாதார மையங்களின் மிகப்பெரிய பற்றாக்குறை நிலவுகிறது. இந்த இடைவெளியை பூர்த்திசெய்வது குறித்து வரைவுக் கொள்கை பெருத்த மௌனம் சாதிக்கிறது. தற்போதைய IPHSன்படி அரசாங்க நிதியின் மூலம் தேவையான உட்கட்மைப்பு வசதிகள் செய்யப்படவேண்டியது மிகவும் அவசியமாகும்.

### தேசிய சுகாதார வரைவுக் கொள்கை : மருந்துகள்

இறுதியாக, இலவசமாகவோ மக்கள் வாங்க முடிந்தவிலையிலோ மருந்துகள் கிடைப்பது குறித்த பிரச்சினையைப் பார்ப்போம். அத்தியாவசியமான, உயிர்காக்கும் மருந்துகள் உரிய தரத்துடன் இருப்பது மக்கள்சார்பு சுகாதாரக் கொள்கைக்கு அவசியமான ஒன்றாகும்.

முந்தைய தேசிய சுகாதாரக் கொள்கைகளிலும் சரி, தற்போதைய வரைவுக் கொள்கையிலும் சரி அனைத்து மக்களுக்கும் பொதுவான மருந்துகள் அரசாங்க மருந்தகங்களில் இலவசமாகவே கிடைக்கும் என கூறப்பட்டது. தேசிய அத்தியாவசிய மருந்துகள் பட்டியலில் பரிந்துரைக்கப்பட்டவைகள் உட்பட – அவற்றின் தரம் ஒருபுறமிருக்கட்டும் – போதுமானஅளவு உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப் படுவதில்லை. அவ்வாறு உற்பத்திசெய்ய உற்பத்தியாளர்களை நிர்ப்பந்திக்கும் எவ்வித சட்டமும் இல்லை. அதற்கான சட்டம் இயற்றும் யோசனையும் அரசாங்கத்திடம் இல்லை.

முதலாளித்துவ உலகமயம், தாராளமயப் பேரழிவுக் கொள்கையின் அமலாக்கத்தை தொடர்ந்து பொதுத்துறையில் இருந்த மருந்து கம்பெனிகளை திட்டமிட்டு நலிவுறச்செய்து, அத்துறை முழுவதும் தனியார் கம்பெனிகளுக்குத் திறந்துவிடப்பட்டது. அவைகள் DPCO (Drug Price Control Order – மருந்து விலைக் கட்டுப்பாட்டு ஆணை – அத்தியாவசிய மருந்துகளின் விலை மற்றும் அதன் வடிவமைப்பை நிர்ணயிப்பதற்கான அத்தியாவசிய சரக்குகள் சட்டத்தின்கீழ் அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணையாகும்)வின் உத்தரவுகளை அலட்சியம் செய்வதுடன் மருந்துவிலையை ஏற்றுகின்றன. உண்மையில், ஏறக்குறைய அனைத்து மருந்துகளும் உயிர்காக்கும் எண்ணற்ற மருந்துகளும் தற்போது விலை கட்டுப்பாட்டிலிருந்து வெளியே வந்துவிட்டன.

பொது நிர்ப்பந்தத்தின் காரணமாக முந்தைய காங்கிரஸ் அரசாங்கம் உயிர்காக்கும் மற்றும் அத்தியாவசிய மருந்துகளின் விலைமீது சிறிது கட்டுப்பாடு கொண்டிருந்தபோதிலும், ஏழ்மையின் உச்சத்திலிருக்கும் நமதுநாட்டு மக்கள் தொட முடியாத விலையில் மருந்துகள் இருக்கின்றன. அதன் காரணமாக நோய் பீடித்த ஆயிரக்கணக்கான மக்கள் ஒவ்வொரு வருடமும் மருந்தும் மருத்துவ சிகிச்சையும் கிடைக்கப்பெறாமல் சாகடிக்கப்பட்டனர். இத்தகைய நிலைக்கு அதிகம் பலியானது குழந்தைகளே.

ஆனால் ஆட்சிக்குவந்த சில மாதங்களுக்குள்ளாகவே பிஜேபி அரசாங்கமானது ஏழைமக்கள், கீழ்நடுத்தரமக்கள், நோய்பீடித்த இந்திய மக்களது உயிரை விலையாகக்கொடுத்து பகாசுர பன்னாட்டு மருந்து கம்பெனிகளும் உள்நாட்டு ஏகபோக மருந்து கம்பெனிகளும் மருந்து விலையை உயர்த்தி அதீத லாபம் பெறுவதற்கான வழியை உருவாக்கியது. அதாவது உயிர்காக்கும் மருந்துகளின், அத்தியாவசிய மருந்துகளின் அக்குறைந்தபட்ச விலை கட்டுப்பாட்டையும்கூட ஒரே அடியில் நீக்கிவிட்டது. இந்த நடவடிக்கையானது 108 அத்தியாவசிய மருந்துகளின் விலையை விர்ரென்று உயர்த்திவிட்டது. முன்பு ரூ. 4,000த்திற்கு கிடைத்த கேன்ஸருக்கான மருந்து ரூ. 1 லட்சத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறு நன்கு வடிவமைக்கப்பட்ட மருந்து உற்பத்தி–விநியோகம்–விலைக் கட்டுப்பாடு மற்றும் தர கட்டுப்பாட்டு கட்டமைப்பின் மூலம் அத்தியாவசிய மருந்துகள் மக்களை சென்றடையச் செய்யும் எந்த நாகரீக அரசாங்கமும் மேற்கொள்ள வேண்டிய கடமையை நிறைவேற்றுவதற்கு பதிலாக இப்படிப்பட்ட ஒரு முக்கியத்துறையை முழுமையாக கொள்ளைலாபமீட்டும் தனியாருக்கு தாரைவார்த்துள்ளது அரசாங்கம்.

அதேபோல, மருத்துவ மற்றும் பரிசோதனை உபகரணங்களின் உற்பத்தியும் தனியாருக்கு விடப்பட்டு, அவற்றின் விலைகளும் கடுமையாக உயர்த்தப்படுகின்றன. இவையனைத்தும் மக்களுக்கு ஆதரவான சுகாதாரக் கொள்கைக்கு விரோதமானதாகும்.

அதுமட்டுமல்ல, கடந்த ஆண்டு தன்னுடைய பட்ஜெட் உரையில் நிதியமைச்சர் அருண் ஜெட்லி, "'அனைவருக்கும் சுகாதாரம்' என்பதை நோக்கிச்செல்ல இலவச மருந்து சேவை மற்றும் இலவச பரிசோதனை சேவை என்ற இரண்டு முக்கிய முயற்சிகளுக்கு முன்னுரிமை தரப்படும்" என கூறினார்.

ஆனால், பட்ஜெட்டில் எவ்வித ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. அவருடைய இவ்வருட பட்ஜெட் உரையில் மருந்து, மாத்திரை, பரிசோதனை என்ற வார்த்தைகள் இடம்பெறவேயில்லை. இவ்வாறு அவர்களின் வழக்கமான வாக்குறுதிகள் யாவும் காகிதத்தோடு முடிந்துவிட்டது. அதுமட்டுமல்ல, பொது சுகாதாரத்திலிருந்து அரசை முழுமையாக விடுவிக்கும்போக்கில் மேலும் ஒருபடி சென்று இலவச மருந்து மற்றும் பரிசோதனைக்கான மத்திய திட்டத்தை தற்போது அரசாங்கம் நீக்கிவிட்டது.

மேலும், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல இன்சுலின், ஹெபடிடிஸ் ஊசி, நீரழிவு மாத்திரை, நோய் எதிர்ப்பு, கேன்ஸர் மருந்துகள் உட்பட 509 அத்தியாவசிய மருந்துகளின் விலையை மருந்து கம்பெனிகள் உயர்த்திக்கொள்ள பிஜேபி அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. இவ்வாறு வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள மக்களுக்கு இலவசமாகவும் மற்றவர்களுக்கு எவ்வளவு குறைந்த விலையில் அளிக்கலாம் என்பதை ஆய்வு செய்யவேண்டிய தேவை இருக்கும்போது, விலையை ஏற்றிவிற்க பகாசுர மருந்து கம்பெனிகளை அரசாங்கம் அனுமதிக்கிறது.

### சுகாதாரத்திற்கான நாடுதழுவிய இயக்கத்தை தீவிரப்படுத்த வேண்டியது தேவை

எனவே, சுகாதாரத்தை சரக்குமயமாக்கி, வணிக அடிப்படையில் நடத்த ஒட்டுமொத்த துறையையும் தனியார் குழுமங்களிடம் விட்டுக்கொண்டிருக்கையில் இனிப்பு வார்த்தைகளைக் கொண்டு மக்களை குழப்புவதற்கான முயற்சியே இவ்வரைவுக் கொள்கையின் நோக்கம் என்பது தெளிவு.

பொதுத்துறை தனியார்துறை கூட்டுப் பங்கெடுப்பின்(PPP) வழியிலும் பிற வழியிலும் அரசாங்க மருத்துவமனைக்குள் தனியார் நுழையும் வழிமுறைகளை அரசாங்கம் ஊக்குவிப்பது அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. பிபிபி வழியின்படி அரசாங்கத்திற்கு சில மேற்பார்வையிடும் பணியினைத் தவிர வேறெந்த பொறுப்பும் கிடையாது. உண்மையில், அரசாங்கம் தரும் அனைத்து வசதிகளையும் நன்கு உபயோகித்துக் கொண்டு தனியார்துறை தங்கள் வணிகத்தை நடத்தும்.

இது நிச்சயமாக பொதுநலனுக்கு எதிரானதாகும். 'அனைவருக்கும் நலவாழ்வு' என்ற பிஜேபியின் தேர்தல் கோஷம் அமுல்படுத்தப்படும் விதம் இதுதானாகும். ஆளும் முதலாளிவர்க்கத்திற்கு சேவகம் செய்யும் கட்சிகள் தேர்தலுக்கு முன்பு ஒரு வாக்குறுதியை கொடுப்பார்கள், ஆட்சியில் அமர்ந்தபின்பு அவ்வாக்குறுதிக்கு நேர்எதிராக நடந்துகொள்வார்கள் என்பதைத்தான் இது நிரூபிக்கிறது.

ஏன் இவ்வாறு? ஏனெனில், ஒவ்வொரு நாள் கடக்கும் போதும் ஆளும் முதலாளித்துவ அமைப்பு அதன் தொற்று நோயாக இருக்கக்கூடிய ஆழமான தீர்க்கமுடியாத சந்தை நெருக்கடிக்குள் மேலும்மேலும் சிக்கி அரைபட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, மக்களின் கடைசிச் சொட்டு ரத்தத்தையும் உறிஞ்சுவதன்மூலம் பெரும் லாபம் சம்பாதிக்கும் மாற்று வழிகளைத் தேடி இந்த ஆளும் முதலாளிவர்க்கம் எப்போதும் அலைந்து கொண்டிருக்கிறது.

மக்களுக்குப் பெரிதும் தேவையாக இருக்கக்கூடிய அத்தியாவசிய சேவைகளிலிருந்து அரசாங்கம் தன்னை மேலும்மேலும் விலகிக் கொண்டு அச்சேவைகளை முதலாளிகளுக்கு தாரைவார்க்க ஏகாதிபத்தியத்தின் உலகமயத்தின் பிரிக்கமுடியாத அங்கமாக இருக்கக்கூடிய தாராளமயம்–தனியார்மயத்தின் கோட்பாடுகள் அரசாங்கத்தை அறிவுறுத்துகிறன. எனவே, பூர்ஷ்வா வர்க்கநலனுக்கு அடிபணிந்து செல்லும் அரசாங்கமானது மக்கள் நலனை அப்பட்டமாக புறக்கணித்து, மருத்துவ நீதிநெறிக்கு சவக் குழியிட்டு, சுகாதாரத்துறையை முழுமையாக தனியார்மயமாக்கும் கொள்கையை கடைபிடிக்கிறது.

இந்தப் பேரழிவுச் சுகாதாரக் கொள்கைக்கெதிராக எழுந்துநிற்கவும் இந்த கொடிய சதித்திட்டத்தை முறியடிக்க சக்திவாய்ந்த, நாடுதழுவிய சுகாதார இயக்கத்தை கட்டியெழுப்புமாறும் அனைத்து டாக்டர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் அறைகூவல் விடுக்கிறோம்.

## பாசிசத்தை சோசலிசம் வெற்றி கொண்ட 70வது ஆண்டு விழா

# ஸ்டாலின் தலைமையிலான வீரஞ்செறிந்த சோவியத் மக்களும் செஞ்சேனையும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியுமே இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிக்குக் காரணம்

1ம் பக்கத் தொடர்ச்சி

இவ்வனைத்து பூர்ஷ்வா சதிகளுக்கும் எதிராக மாபெரும் லெனினின் தலைமையில் புதிதாகப் பிறந்திருந்த சோவியத் யூனியன் எதிர்த்து நின்றதோடு, சோசலிசத்தை வலுப்படுத்தி, முதலாளித்துவத்தைக் காட்டிலும் தனது மேன்மையை வாழ்க்கையின் அனைத்து கோணங்களிலும் நிரூபித்தது.

*1924*இல் லெனின் இறந்தவுடன், அந்தப் பணியை முன்னெடுத்துச் சென்று, பிற்போக்கு சக்திகளின் அனைத்து சதிகளையும் இடையூறுகளையும் பிரச்சினைகளையும் மீறி, இளம் சோசலிசத்தைக் காப்பாற்றி, முன்னேற்றும் பொறுப்பு லெனினின் உற்ற தோழரும் மிகவும் நம்பத்தகுந்த சீடருமான ஸ்டாலின் மீது விழுந்தது. லெனினிசத்திற்கு அடித்தளமிட்டவர் ஸ்டாலின். அதோடு லெனினிசம் என்பது ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளிவர்க்கப் புரட்சி என்ற காலகட்டத்திய மார்க்சிசம் என்றும் எடுத்துக்காட்டினார். அதோடு சோவியத் யூனியனின் அனைத்து மக்களையும் எழுச்சியுறச்செய்து, சோசலிசத்தை துரிதமாக வலுப்படுத்தி, மக்களின் வாழ்க்கையின் அனைத்து பிரிவுகளிலும் அற்புதமான வளர்ச்சிகளைக் கொண்டுவந்தவரும் ஸ்டாலின்தான். மார்க்சிசம்–லெனினிசத்தின் லட்சியங்களையும் புதிய உயர்ந்த பாட்டாளிவர்க்க அறநெறியையும் கலாச்சாரத்தையும் மக்கள் உய்த்துணர்ந்ததோடு முன்னெப்போதும் கண்டிராத சமூகப் பொறுப்புணர்வையும் நோக்கமுடன் செயல்படும் தன்மையையும் பிரதிபலித்து ஸ்டாலினின் அறைகூவலுக்கு முழுமனதோடு அவர்கள் செவிமடுத்தனர். தொழில்மயமாக்கல் மற்றும் விவசாய உற்பத்தியில் எற்கெனவே நன்கு வளர்ந்திருந்த ஏகாதிபத்தியசக்திகளையெல்லாம் வெறும் இருபது ஆண்டுகளுக்குள்ளாகவே சோவியத் யூனியன் விஞ்சியது. மக்களின் வாழ்க்கைத் தரம் நிலையாக உயர்ந்தது. விலைவாசி பெருமளவு குறைந்தது. வேலையில்லாத்திண்டாட்டம், பிச்சையெடுத்தல், விபச்சாரம் இன்னும் இதுபோன்ற முதலாளித்துவ சமுதாயத்தின் இழிவுகள் எல்லாம் கடந்தகால விஷயங்களாக போயின. சோவியத் கட்சிக்குள்ளேயே இருந்துகொண்டு சோசலிசத்தை அழிப்பதற்கு எத்தனித்த துரோகிகளின் நயவஞ்சகத் திட்டங்களைக் கடுமையாகக் கையாண்டு முறியடித்த ஸ்டாலின் அனைத்துவிதமான திரிபுகள் மற்றும் வக்கிரமயமாக்கலிலிருந்து மார்க்சிசம்–லெனினிசத்தின் உயிர்க்கருவைப் பாதுகாப்பதற்கான உக்கிரமான சித்தாந்தப் போராட்டத்தை ஓய்வொழிவின்றி நடத்தினார்.

### சோவியத் சோசலிசம் உருவாகி இருபது வருடங்களிலேயே இரண்டாவது உலகப்போர் வெடித்தது

ஆனால் சோவியத் யூனியனில் சோசலிசம் உறுதியாகக் காலூன்றி, உலகக் கம்யூனிஸ்ட் இயக்கம் வலிமை பெற்றுவந்த வேளையில் ஜெர்மனியிலும் இத்தாலியிலும் உருவெடுத்த பாசிசமும் கடும் அழிவைத்தரும் மற்றொரு உலகப்போர் எனும் இருள்மேகமும் சேர்ந்து உலகை அச்சுறுத்தின. சந்தையைக் கைப்பற்றுவதற்காகவும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காகவும் ஏகாதிபத்திய வாதிகள் போரை உருவாக்குகிறார்கள் என்று நீண்ட நாட்களுக்கு முன்பாகவே லெனின் எடுத்துக்காட்டியிருந்தார். முதல் உலகப்போரில் இரு புறமும் எதிரெதிரே ஏகாதிபத்தியங்கள் (அதாவது நாடுபிடிப்பவர்கள், வேட்டைக்காரர்கள், கொள்ளையடிக்கும் போர் புரிபவர்கள்). இருந்தன; அது உலகைப் பங்கிட்டுக் கொள்வதற்கும், காலனிகளை பிரித்துக்கொள்வதற்கும் மறுபங்கீடு செய்து கொள்வதற்கும், நிதி மூலதனத்தின் மீது 'ஆதிக்கம் செலுத்துவது' உள்ளிட்டவற்றை தீர்மானிப்பதற்கான போர் என்று லெனின் விளக்கியுரைத்தார்.

இரண்டாவது உலகப்போரிலும்கூட, ஜெர்மனி மற்றும் இத்தாலி (பிறகு ஜப்பான் இணைந்தது) பாசிசக் கூட்டணியும் துப்பாக்கி முனையில் உலகச் சந்தையைக் கைப்பற்றி தங்களது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கவேண்டும் என்ற அதே நோக்கமே இருந்தது. இன உயர்வு கருத்தியலையும் தேசிய வெறிவாதத்தையும் தூண்டிவிட்டு, முற்போக்கு கோஷங்களையும் எழுப்பி, பெரும்பான்மை ஜெர்மன் மக்களை தனக்கு ஆதரவாகத் திரட்டி, அனைத்து நாடுகளின் மீதும் தாக்குதல் தொடுத்து அவற்றைத் தனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவர மிகவும் பலமான ராணுவப் போர்த்தளவாடங்களைக் குவிக்கும் நடவடிக்கை எடுத்தார் ஹிட்லர். முதலில் பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம் இன்னும் இதுபோன்ற ஐரோப்பாவின் வலிமை வாய்ந்த முதலாளித்துவ–ஏகாதிபத்திய சக்திகளைத் தனது ஆளுகையின் கீழ் கொண்டுவரவேண்டும் என்பது ஹிட்லரின் திட்டம். புரட்சிக்கு முந்தைய ரஷ்யா மிகவும் பின்தங்கியிருந்ததால், தனது ராணுவ பலத்தின் முன்னால் புதிதாய்ப் பிறந்த சோசலிச சோவியத் யூனியன் ஈடுகொடுக்க முடியாது என்று அவர் கருதினார். எனவே இறுதியில், தனது சுட்டு விரலின் அசைவில் சோவியத் யூனியனை தன்னோடு இணைத்துவிடலாம் என்று கனவு கண்டார். மேற்கு ஏகாதிபத்திய சக்திகளான அமெரிக்கா–பிரிட்டன்–பிரான்ஸ் போன்றவை உலகின் முதல் உழைக்கும் வர்க்கத்தின் அரசான, முதல் சோசலிச நாடான சோவியத் யூனியனை ஹிட்லர் தாக்கவேண்டும் என்று விரும்பின. ஹிட்லரின் மறைமுகமான இந்த ராஜதந்திரத்தை மாபெரும் கம்யூனிசத் தலைவர் ஸ்டாலின் புரிந்துகொண்டார். மேற்கத்திய "ஜனநாயக" ஆட்சியாளர்களின் நோக்கத்தையும் கண்டுணர்ந்தார். சொல்லப்போனால், தேசிய சோசலிசம் என்ற முழக்கத்தை எழுப்பி, ஜெர்மனியின் வேந்தராக ஹிட்லர் நியமிக்கப்பட்டவுடன் அம்முழக்கத்தின் அடியில் புதைந்திருக்கும் நோக்கத்தையும் அதோடு மேலும் ஒரு போர் வர இருக்கிறது என்பதையும் ஸ்டாலின் உணர்ந்து கொண்டார்.

ஜனவரி *1934*இல் நடைபெற்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி (சிபிஎஸ்யு) போல்ஷ்விக்கின் *17*வது கட்சிக் காங்கிரசில் அறிக்கை சமர்பித்த ஸ்டாலின் கூறியதாவது: "போர்வெறி பிடித்த பூர்ஷ்வா அரசியல்வாதிகளிடையே இன்று பாசிசம் என்பது மிகவும் வரவேற்கத்தக்க சரக்காகி விட்டதில் வியப்பேதும் இல்லை. நான் பாசிசத்தை பொதுவாக மட்டும் குறிப்பிடவில்லை, தேசிய சோசலிசம் என்று தவறாக அழைக்கப்படும் ஜெர்மன் மாதிரியான பாசிசத்தையே குறிப்பிடுகிறேன். தவறானது என்று குறிப்பிடுவதற்குக் காரணம், அதை எப்படி ஆய்வு செய்து பார்த்தாலும் அதில் அணு அளவுகூட சோசலிசம் இல்லை... பாசிசத்திற்கு வழிவகுக்கும் சமூக ஜனநாயகம்... என்பது... பாராளுமன்றவாதம் மற்றும் பூர்ஷ்வா ஜனநாயகம் என்ற பழைய முறைகளால் பூர்ஷ்வாக்கள் இனியும் ஆட்சி செய்ய முடியாது என்பதன் அறிகுறியே ஆகும். இதன் விளைவாக, ஆட்சி செய்வதற்கு அதற்கே உரிய தீவிரவாத முறைகளையும்... அதோடு ...போர்க் கொள்கையை பின்பற்றுவதற்கும் தள்ளப்படுகின்றனர்." அவரது கவலையும் பிரதான கடமையும் உலகம் முழுவதும் விடுதலையை எதிர்பார்த்திருக்கும் மக்கள் முன்பு உள்ள ஒரே நம்பிக்கையாகத் திகழும் சோசலிச சோவியத் யூனியனைப் பாதுகாப்பதில்தான் இருந்தது.

நாசி–எதிர்ப்பு கூட்டணிக்குள் பிரிட்டனையும் பிரான்சையும் வசீகரம் செய்வதற்காக ஒரு வலிமை மிக்க ராணுவப் படையை அனுப்புவதற்கு சோவியத் யூனியன் முன்மொழிந்ததை *70* ஆண்டுகளாக ரகசியமாக மறைத்து வைக்கப்பட்டு சமீபத்தில் வெளியிடப்பட்ட ஆவணங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஹிட்லரை கட்டுப்படுத்துவதற்கென ராணுவப் படையை அளிக்க முன்வந்த செயல், போர்தொடங்குவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு *1939*இல் க்ரம்லினில் சோவியத் ராணுவ உயர் அதிகாரிகளுக்கும் பிரிட்டிஷ் மற்றும் பிரான்சின் உயர் அதிகாரிகளுக்கும் இடையே நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் மேற்கத்திய கூட்டணிக்காக ஸ்டாலின் அளிக்க முன்வந்த உதவியை பிரிட்டனும் பிரான்சும் ஏற்கவில்லை. (The Telegraph, UK, 18-10-2008) இத்தகைய சூழ்நிலைமையில் ஸ்டாலின் ஆகஸ்ட் *23, 1939*இல் ஹிட்லருடன் 'முதலில் தாக்குதல் நடத்தமாட்டோம்' என்ற ஒரு சாதுரியமான உடன்படிக்கையை ஏற்படுத்தி, அனைவருக்கும் வியப்பளித்தார். இந்த உடன்படிக்கைக்கு ஹிட்லரும் ஒப்புக்கொண்டார். ஏனெனில் இதன்மூலம் பலவீனமான கிழக்கு ஐரோப்பாவையும் பால்கன் அரசுகளையும் எளிதாக ஆக்கிரமித்துவிடலாம் எனவும் இரண்டாம் உலகப்போர் தொடங்கிய உடனேயே இருமுனைப் போர் செய்யாமலிருக்க இது அவருக்கு சற்று அவகாசத்தை வழங்கும் என்றும் ஹிட்லர் கருதினார். மற்றொருபுறம், மேற்கத்திய ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிரான வெற்றியை உத்திரவாதப்படுத்திய உடனேயே விரைவாகவே சோவியத் யூனியன்மீது பாசிச ஜெர்மன் படைகள் தாக்குதல் தொடுப்பது நிச்சயம் என்பதை ஸ்டாலின் நன்கறிந்திருந்தார். ஆதலால், கிடைத்த இந்த கால இடைவெளியை பாசிசத் தாக்குதலைத் தலைநிமிர்ந்து எதிர்த்து நிற்பதற்குத் தேவையான தயாரிப்புகளை மேகொள்வதற்கும், சோசலிசப் பொருளாதாரத்தில் இதுவரை அடைந்த முன்னேற்றங்களையும் தொழில்மயமாக்களையும் சமூக முன்னேற்றுதல்களையும் பாதுகாப்பதற்குரிய பாதுகாப்பு நடவடைக்கைகளையும் மேற்கொள்வதற்கும் பயன்படுத்திக்கொண்டார். அதேபோல், இந்த உடன்படிக்கையின்மூலம் ஹிட்லருடன் ஸ்டாலின் சமரசம் செய்துகொண்டு விட்டதாகக் காட்டுவதற்கு ஏகாதிபத்திய–முதலாளித்துவ சக்திகள் முயன்றன. ஏன் இன்றும் கூட, பிற்போக்கு பூர்ஷ்வா முகாமும் அதேபோல் ஸ்டாலினின் புகழைக் கெடுக்க விரும்புகிற, பாசிசத்தை வீழ்த்தியதில் அவருடைய பங்கை ஏற்க மறுக்கிற திருத்தல்வாத துரோகிகளும் இந்த உடன்படிக்கையை துரோக நடவடிக்கை என்று கூறுகின்றனர். ஆனால் அந்த நாளில் ஏற்பட்ட மிகவும் சிக்கலான நிலைமையை கையாள்வதில் ஸ்டாலின் எப்படிப்பட்ட ராஜதந்திர சாதுரியத்தைக் கையாண்டு பாசிசத்தின் பிடிகளிலிருந்து மனித குலத்தைக் காப்பதில் உதவினார் என்பதை வரலாறு நிரூபித்துக் காட்டியுள்ளது, தெள்ளத்தெளிவாகக் காட்டியுள்ளது.

தொடர்ச்சி 6ம் பக்கம்



மே *21, 2015* அன்று எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர் தோழர் கிருஷ்ண சக்ரவர்த்தி அவர்கள் பூகம்பம் பாதித்த நேபாளத்திற்கு நிவாரண நிதியாக ரூ. *25* லட்சம் காசோலையை நேபாள யுசிபின் (மாவோயிஸ்ட) சேர்மன் பிரசண்டா அவர்களிடம் கொடுத்தார்

## பாசிசத்தை சோசலிசம் வெற்றி கொண்ட 70வது ஆண்டு விழா

# சிக்கலான போர் சூழ்நிலைமைகளை கையாண்டதிலும் பாசிசத்தின் பிடியிலிருந்து மனித இனத்தைக் காத்ததிலும் ஸ்டாலின் காட்டிய விவேகத்திற்கு வரலாறே சாட்சி

5ம் பக்கத் தொடர்ச்சி

மேற்கத்திய ஏகாதிபத்திய சக்திகளின் துரோகம் எதிர்பார்த்தபடியே, உடன்படிக்கை ஏற்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே, நாஜி ஆட்சியானது ஐரோப்பாவை ஆக்கிரமித்தபிறகு, அதிக பட்ச சிப்பாய்களையும் ஆயுதங்களையும் குவித்து, **22 ஜூன் 1941**இல் சோவியத் யூனியனைத் தாக்கியது. மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் துரோகப் பங்கு குறித்து ஸ்டாலின் முன்கூட்டியே கூறியிருந்தார். அது எந்த அளவு சரி என்பது நாஜிப் படைகள் சோவியத் யூனியன்மீது தாக்குதல் தொடுத்த இரண்டே நாளில் நிரூபணமானது. எவ்வாறெனில், “போரில் ஜெர்மனி வெற்றிபெறுவதாக இருந்தால் நாம் ரஷ்யாவிற்கு உதவவேண்டும். ரஷ்யா வெற்றி பெறுவதாக இருந்தால் ஹிட்லருக்கு உதவவேண்டும். அப்போதுதான் இரண்டு தரப்புகளும் அழிவை சந்திக்கும்” என அமெரிக்க செனட் உறுப்பினர் ஹார்ரி ட்ரூமேன் (பின்னாளில் அவர் அமெரிக்க அதிபரானார்) கூறியதிலிருந்து நிரூபணமானது. இதுதான் நேசப் படைகளின் உண்மையான முகம். ஜெர்மனியும் சோவியத் யூனியனும் பேரழிவிற்கு உள்ளாகிவிட்டால், ஒட்டுமொத்த உலகச் சந்தையையும் தாங்கள் கைப்பற்றி முழுமையாகத் தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிடலாம் என்றும் அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்கள் கனவு கண்டன.

இது தொடர்பாக மற்றொரு விஷயத்தையும் கூறுவது இங்கே பொறுத்தமாக இருக்கும். பாசிச ராணுவம் சோவியத் யூனியன்மீது போர்தொடுத்து தாக்குதல் நடத்தி, கொத்துக்கொத்தாகக் கொலை செய்தும் வளங்களை அழித்துக் கொண்டுமிருக்கையில், மேற்கு ஐரோப்பாவில் ஒரு இரண்டாவது போர்முனையை உருவாக்கி பிரான்ஸ் வழியாக ஜெர்மன் மீது தாக்குதல் தொடுக்குமாறு அமெரிக்க–பிரிட்டிஷ்– பிரான்ஸ் ஆட்சியாளர்களுக்கு ஸ்டாலின் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுத்தார். ஸ்டாலினின் இந்த வேண்டுகோளுக்கு செவிமடுத்து அமெரிக்கா–பிரான்ஸ்–பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இதைச் செய்திருந்தால், கிழக்கு பகுதியில் போர்க்களத்தில் இருந்த சிப்பாய்களை திரும்பப்பெற்று அவர்களை மேற்குப்பகுதிக்கு அனுப்பவேண்டிய நிர்ப்பந்தம் ஹிட்லருக்கு ஏற்பட்டிருக்கும். ஹிட்லரின் படை பிரிக்கப்பட்டிருக்கும். சோவியத் யூனியனின் மீதான தாக்குதலின் உக்கிரம் ஓரளவு குறைந்திருக்கும். ஆனால் மேற்கத்திய ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் இதற்கு செவிசாய்க்கவே இல்லை.

ஆனால் இதை அவர்கள் எப்போது செய்தனர்? பாசிச ஜெர்மன் படைகளை கிழக்கு ஐரோப்பாவிலிருந்து சோவியத் செஞ்சேனைகளும் மக்களும் வெற்றிகரமாகத் துரத்தியடித்த வேளையில் இவர்களது உதவி ஸ்டாலினுக்குத் தேவைப்படாத நேரத்தில் உள்ளே வந்தனர். பெர்லினை செஞ்சேனை சென்றடைவதற்கு முன்பாக தாங்கள் நுழைந்துவிடவேண்டும் என்ற உள்நோக்கத்தோடு **1944**இல் நேசப்படைகள் தங்களது படைகளை, பிரான்சின் கடலோரப் பகுதியான, நார்மண்டி–க்கு அனுப்பி அங்கிருந்து தங்களது தாக்குதல்களைத் தொடுத்தனர். ஆக, பலமிக்க பாசிச ராணுவ பலத்திற்கு எதிராக சோவியத் சோசலிச அரசு தன்னந்தனியாகப் போராட வேண்டியிருந்தது. இறுதியில் ஜெர்மனியும் ஜப்பானும் சரணடைய இருந்த தறுவாயில்தான், பாசிசத்தை வீழ்த்திய பெருமை சோவியத் செஞ்சேனை துணிச்சல்மிகு சோவியத் மக்கள் மற்றும் மாபெரும் ஸ்டாலினுக்குக் கிட்டிவிடக்கூடாது என்பதற்காக அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள், ஹிரோஷிமா மற்றும் நாகசாகி மீது இரண்டு அணுகுண்டுகளை வீசி **2** லட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவி ஜப்பானிய மக்களைக் கொன்றுகுவித்தனர். இதன்மூலம் போரில் தாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம் என்று இருமாப்போடு தம்பட்டம் அடித்துக் கொண்டனர்.

### நாஜிக்களின் தாக்குதலுக்கு பிரிட்டன் – பிரான்ஸ் – அமெரிக்காவால் பதிலடி கொடுக்க முடியாதது ஏன்?

ஆனால் தந்திரங்களும் ஏமாற்றுவித்தைகளும் உண்மையை மறைக்க முடியாது. அன்று மிகுந்த ராணுவபலத்தை வைத்திருந்த பிரிட்டனும் பிரான்சும் பாசிசத் தாக்குதல் முதலில் தொடுக்கப் பட்டபோதே ஏன் எதிர்த்து விரட்ட முடியவில்லை? ஏனெனில், நாம் முன்பே கூறியபடி இரண்டாவது உலகப் போர் என்பது உலக முதலாளித்துவ சந்தையைக் கைப்பற்றுவதற்கான ஏகாதிபத்தியப் போரே தவிர வேறொன்றுமல்ல. ஜெர்மனி ஒரு ஏகாதிபத்திய சக்தி. அது முதல் உலகப்போரில் ஆங்கிலோ–பிரெஞ்சு ஏகாதிபத்திய சக்திகளிடம் படுதோல்வியைச் சந்தித்தது, அதனால் அது தனது சந்தையை இழந்து கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. பிரிட்டிஷ்–பிரெஞ்சு–அமெரிக்கா மற்றும் இதர மேற்கத்திய ஏகாதிபத்திய சக்திகளிடம் பறிக்கப்பட்டுக் கிடந்த தனது அந்த இழந்த சந்தையை மீண்டும் கைப்பற்றுவதற்கு ஜெர்மனி முயன்றது. போர் தொடுத்தால் மட்டுமே அது சாத்தியமாகும். எனவே ஜெர்மனி மற்ற நாடுகளின் மீது போர் பிரகடனம் செய்தது. இதே நோக்கத்திற்காக இருந்த மற்றொரு பாசிச சக்தியாக உருவெடுத்த முசோலினியின் இத்தாலியை கூட்டு சேர்த்தது. உலகம் முழுவதும் நிலவிய உக்கிரமான அதிகரிக்கும் உலகப்பொருளாதார நெருக்கடியின் பாதிப்பில் பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் இதர ஏகாதிபத்திய நாடுகளின் மக்கள் கடுமையான முதலாளித்துவ சுரண்டலால் துன்பப் பட்டுக்கொண்டிருந்தனர். இதனால் தத்தமது நாடுகளின் ஆட்சியாளர்களின் மீது கடுமையான அதிருப்தியும் எதிர்ப்பும் நம்பிக்கையின்மையும் அவர்களிடையே பெருகியது. எனவே அவர்களது நாடுகள் தாக்கப்பட்டபோது ஊடுருவியுள்ள எதிரிகளை சந்திக்கவல்ல அந்த மக்களை சித்தாந்த ரீதியாகவும் அரசியல்ரீதியாகவும் தட்டியெழுப்ப சுரண்டல் ஏகாதிபத்திய–முதலாளித்துவ ஆட்சியாளர்களால் இயலவில்லை. எதிரெதிர் நலன்களைக் கொண்ட முதலாளித்துவ உரிமையாளர்களுக்கும் ஒடுக்கப்படும் உழைக்கும் வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடு கடுமையான நெருக்கடியால் உக்கிரமடைந்துவிட்டதால் தேச ஒற்றுமை என்ற அறைகூவல் எடுபடவில்லை. எனவே பிரிட்டன் – பிரான்ஸ் – அமெரிக்கா மற்றும் பிற நாடுகள் தங்களது கூலி ராணுவ படை – ஆயுதபலத்தை மட்டுமே நம்பியிருந்தனர். மற்றொரு புறம் ஐரோப்பிய நாடுகளுக்குள்ளேயே பல்வேறு அதிருப்தியடைந்த பழங்குடியினர், யூதஎதிர்ப்பு நாஜிஆதரவுக் குழுக்களும் இருப்பதை ஹிட்லர் அறிந்திருந்தார். இந்த நாடுகளில் பணத்தையோ அல்லது வேறு ஏதாவது ஆதாயத்திற்காகவோ அவர்களது சொந்த நாட்டிற்கு எதிராகவும் தங்களுக்கு ஒத்துழைப்பும் தரத் தயாராக இருக்கும் ஐந்தாம்படையினர் அல்லது துரோகிகள் ஏராளமானோர் இருப்பதை ஜெர்மன் பாசிஸ்டுகள் அடையாளம் கண்டனர். தங்களது ஆதாயத்திற்காக நாஜிகள் இந்த மக்களைப் பயன்படுத்திக் கொண்டனர். மேற்கத்திய நாடுகளில் கொரில்லாப் போர் மூலமாக பாசிஸ்டுகளுக்கு எதிர்தாக்குதல் கொடுக்கப்பட்டது. அதில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலானோர் கம்யூனிச கருத்துக்களால் உந்தப்பட்டு அந்த நாடுகளின் ஆளும் பூர்ஷ்வாக்களுக்கு எதிராகப் போராட்டத்தை நடத்திவந்த தன்னார்வத் தொண்டர்களே ஆவர்.

### சோசலிச சித்தாந்தம் மற்றும் மக்கள் அதிகாரத்தின் அடிப்படையில் அமைந்தது சோவியத்துகளின் எதிர்ப்புப் போர்

ஆனால் சோவியத்துகள் காட்டிய எதிர்ப்புப் போரில் காட்சி முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. சோவியத் சோசலிச சமுதாயம் என்பது சுரண்டலிலிருந்து முற்றிலும் விடுபட்டிருந்தது. அதோடு கூடவே, பொருளாதாரச் சுரண்டலுக்கு முடிவு கட்டிய சோவியத் சோசலிசம் மொழி, இனம், மத மற்றும் பிராந்திய மோதல்களை நீக்குவதற்கான தங்களது கடமைகளில் பெருமளவு முன்னேறியிருந்தது. மார்க்சிசம்–லெனினிசம் என்ற உயர்ந்த லட்சியத்தை உய்த்துணர்ந்திருந்த சோவியத் மக்கள் அனைவரும் தங்களது இறுதி சொட்டு ரத்தத்தையும் சிந்தி, சோசலிசத்தைக் கட்டியெழுப்பி வலுப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர். உக்ரைனில், ஜெர்மனியைப் பூர்வீகமாகக் கொண்ட பழங்குடியினர் குறிப்பிட்ட எண்ணிக்கையில் இருந்தனர். ஆனால் அவர்களில் ஒருவரைக் கூட துரோகியாக மாற்ற ஹிட்லரால் முடியவில்லை. ஜெர்மனியின் தாக்குதலின் ஆரம்பக் கட்டத்தில், செஞ்சேனை பின்வாங்கி சென்றபோது ரஷ்யாவில் பன்மொழி பேசும், பன்மதங்களைச் சேர்ந்த சிறுபான்மை மக்களும் வாழ்ந்த பகுதிகளுக்குள்தான் தஞ்சமடைந்தது. நாஜிக்களின் கடுமையான சித்திரவதைகளுக்கு அவர்கள் ஆளானபோதும் ஒருவர்கூட போல்ஷ்விக்குகளுக்கு எதிராகச் செல்லவில்லை. ஜெர்மன் படைகள் முன்னேறிய போதிலும், கட்சித்தலைமையின் கீழ் பணியாற்றிய தன்னார்வத்தொண்டர்களான பார்ட்டிசன் வீரர்கள் ஜெர்மனியின் பீரங்கிகளைத் தீயிட்டுக் கொளுத்தினர். உபகரணங்கள் வழங்குவதைத் தடுத்து நிறுத்தினர். ரயில்வே மற்றும் இதர தொலை தொடர்புகளை இடையூறு செய்து தொடர்புகளைத் துண்டித்தனர். அவர்கள் கோதுமை போன்ற அத்தியாவசிய உணவுப் பயிர்கள், தூய நீர் போன்றவற்றை பாசிஸ்டுகளுக்குக் கிடைக்கவிடாமல் பார்த்துக்கொண்டனர். நேரடியாக செஞ்சேனைக்கும் மறைமுகமாக பார்ட்டிசன்களுக்கும் இடையே ஜெர்மன் படைகள் சிக்கிக்கொண்டன. செஞ்சேனை என்பது கூலிப்படையல்ல. ஆனால் என்ன விலை கொடுத்தேனும் சோசலிசத்தைப் பாதுகாத்திட வேண்டும் என்ற பற்றுறுதியுடன் கூடிய சித்தாந்த ரீதியாக ஒன்றுதிரட்டப்பட்ட படையாக இருந்தது. பாசிசத்திற்கு எதிரான போல்ஷ்விக்குகளின் போர் என்பது குருட்டுத்தனத்திற்கு எதிரான காரணமறிதலின் போராக, படைமுறைப்படுத்தலுக்கு எதிரான தனிநபர் சுதந்திரத்தின் போராக, மனித நேயத்தை அழிப்பவருக்கு எதிரான மனித நேயத்தின் போராக இருந்தது. இந்தப்போரில் தங்கள் குடும்பங்களில் ஒருவரையாவது இழக்காத ஒரு குடும்பம் கூட ரஷ்யாவில் இல்லை. அந்த அளவிற்கு சோசலிசத்தைக் காக்க ஒட்டுமொத்த நாடும், குடும்பம் குடும்பமாக தியாகம் செய்தன. ஜாய், லிஸா, இவன், ஒலெக், உலியானா, லுபோவ் அல்லது செர்கெய் போன்ற பார்ட்டீசன் வீரர்கள், அதாவது ரஷ்ய மண்ணின் தலைசிறந்த மகன்களாக இருந்து இளம்பருவத்திலேயே தங்களது இன்னுயிர்களைத் தியாகம் செய்து முன்னுதாரணங்களாகத் திகழ்ந்தனர். செபஸ்டொபோல் எனுமிடத்தில் தீரமாகப் போர்புரிந்து தனது உயிரை விடும்போது ஒரு சோவியத் பதின்ம வயதினன் ‘நான் லெனினின் கம்சொமோல் உறுப்பினர்’ என்று கூறினான். ஸ்டாலின்கிரேடு போர்முனையில் இருந்து ஒரு செஞ்சேனை வீரர் ஸ்டாலினுக்கு எழுதிய கடிதத்தில் : ‘ஜாரிட்சின் – ஐ (ஸ்டாலின் கிரேடின் பழைய பெயர்) பாதுகாக்க எங்களது தந்தையர்கள் உங்களது பெயரால் தங்களது உயிர்களைத் தியாகம் செய்தார்கள். ஆகையால் நாங்களும் ஸ்டாலின்கிரேடைப் பாதுகாக்க என்ன விலையும் கொடுக்கத் தயார்’. இப்படியாக, ஸ்டாலினின் அறைகூவலுக்கு செஞ்சேனை மட்டுமல்லாது, அனைத்து ஆண்களும் பெண்களும், இளைஞர்களும் வயதானவர்களும், குழந்தைகளும், ஏன் மருத்துவமனைகளிலிருந்து நோயாளிகள்கூட செவிமடுத்து தங்கள் கைகளில் எதைத் தாங்க முடியுமோ அதைதாங்கி லெனின்கிராட் பாதுகாப்பதற்கான போரில் வீறுகொண்டு எழுந்தனர். நள்ளிரவில் சோவியத் தலைமைத் தளபதி மார்ஷல் ஜுக்கோவுக்கு ஸ்டாலினிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. ‘லெனின்கிராட் உங்களால் பாதுகாக்க முடியுமா’ என்று அவரிடம் ஸ்டாலின் கேட்டார். முடியுமென்ற நம்பிக்கையான பதிலளித்தார் ஜுக்கோவ். ‘கம்யூனிஸ்ட் போல் எனக்கு பதிலளியுங்கள்’ என்றார் ஸ்டாலின். ஆம், பாசிசப் படைகளை துரத்தியடித்ததன் மூலம் அந்த பதிலை மனோதிடமிக்க செஞ்சேனையும் பொது மக்களும் அளித்தனர். ‘லெனின்கிரேடு’ – எப்படிப்பட்ட உணர்ச்சிப் பெருக்கான வார்த்தை! இந்தப் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே அது சோவியத் மக்களிடம் மட்டுமல்லாது உலகம் முழுவதிலுமுள்ள கம்யூனிஸ்டுகள் மற்றும் உழைக்கும் வர்க்கத்திடையே உணர்ச்சி பொங்கச் செய்யும். சோவியத் மக்களும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் மனிதகுல விடுதலையின்

தொடர்ச்சி 7ம் பக்கம்

## பாசிசத்தை சோசலிசம் வெற்றி கொண்ட 70வது ஆண்டு விழா

# முதலாளித்துவ–ஏகாதிபத்திய நாடுகளில் இன்று பாசிசம் ஒரு பொதுவான அம்சமாக இருக்கிறது

6ம் பக்கத் தொடர்ச்சி

அடையாளமான தோழர் ஸ்டாலினும் சோசலிசத்தை அழித்தொழிப்பதற்காக, கற்பனைசெய்து பார்க்க முடியாத அளவிற்கு காட்டுமிராண்டித்தனத்தில் ஈடுபட்ட ஏகாதிபத்தியசக்திகளின் பாசிச ராணுவத் தாக்குதலுக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்து முறியடித்தனர். பாசிசத்திற்கு எதிரான இந்த உலகளாவிய சக்தியின் தலைமையாக இருந்தவர் ஸ்டாலின், அவரே மாபெரும் புரட்சிகரப் போராட்டத்தின், புரட்சிக்கும் மக்கள் நலனுக்கும் அர்ப்பணிப்பு செய்த ஒரு வாழ்க்கையின் உற்பத்தி ஆவார்.

### ஸ்டாலின் – தலைசிறந்த ராஜதந்திரி

காலத்தின் தேவையை உணர்ந்து அதற்கேற்ற வகையில் போர்த் தந்திரங்கள் அனைத்திலும் ஸ்டாலின் கைதேர்ந்தவரானார். ராணுவத்தின் தலைமைக் கமாண்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், கிடைத்த குறுகிய காலத்திலேயே போர் பற்றிய முழுமையான விவரங்களை அவர் கிரகித்துக் கொண்டார். இதைப் பார்த்து அனுபவமிக்க பழம்பெரும் ரஷ்யத் தளபதிகள் ஆச்சரியப்பட்டனர். சர்ச்சில் மற்றும் ரூஸ்வெல்ட் ஆகியோருடன் நடைபெற்ற போர்த்திட்டங்கள் வகுக்கும் கூட்டத்தில் ஸ்டாலினிடமிருந்து வெளிப்பட்ட போர் விஞ்ஞானம் பற்றிய அளப்பறிய அறிவையும் கிரகிப்பையும் பார்த்து பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கத் தளபதிகளும் வியப்படைந்தனர். மேற்கத்திய முனையில் போர் தந்திரத்தை வகுப்பதற்கும் அவர் வழிகாட்டுதல்களை வழங்கினார். ஒரு மார்க்சிய புரட்சிகரத் தலைவரால், தேவைப்பட்டால், அனைத்துத் துறைகளிலும் உயர்ந்த புலமை பெறமுடியும் என்பதற்கு சான்றாக திகழ்கிறார் ஸ்டாலின்.

### ஸ்டாலின் அனைவராலும் போற்றப்பட்டார்

ஸ்டாலினுக்கு எதிரான ஹிட்லரின் அவதூறுப் பிரச்சாரத்தை முகாந்திரமாகக் கொண்டு, ஸ்டாலின் மீதிருந்த பயத்தின் காரணமாக ஏகாதிபத்தியங்கள்–முதலாளித்துவங்கள் மனிதாபிமானமற்றவர், சர்வாதிகாரி, அடக்குமுறையாளர், பழிவாங்குபவர், ஏன் ராட்ஷசன் என்றெல்லாம்கூட ஸ்டாலின்மீது முத்திரை குத்தியபோது, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த உண்மையான தேசியவாதிகள், மனிதநேயவாதிகள், புகழ்பெற்ற அறிவுஜீவிகள், விஞ்ஞானிகள், இலக்கியவாதிகள் அதே போன்று சாமானிய மக்களும் போல்ஷ்விக்குகளுக்கு ஆதரவாக நின்றனர். ஒரு வித்தியாசமான மாபெரும் தலைவர் என்று ஸ்டாலினைப் போற்றிப் புகழ்ந்தனர்.

மாபெரும் மனிதநேய சிந்தனையாளர் ரொமைன் ரோலண்ட் அவர்கள் ஸ்டாலினைப் பற்றி எழுதுகையில், “அவரது புத்திசாலித்தனம்... எப்போதும் விழிப்போடும், தடுமாற்றமில்லாமலும் நேர்மையாகவும் உண்மையாகவும் இருக்கும். அவரது இந்த புத்திசாலித்தனம் முடிவெடுப்பதற்கு முன்பு சற்றும் தடுமாறாது. அவருக்கு சுற்றி வளைத்துப் பேசும் பழக்கம் கிடையாது. அவரது ராஜதந்திரத்தில் எந்த கோணல்புத்தியும் இருக்காது. புகழ்ச்சியோ பாராட்டுதல்களோ இருக்காது...அவரது உருவாக்கத்தின் ஒட்டுமொத்த அடிக்கல்லும் அவரது கூர்மையான பகுத்தறிவு, எல்லையில்லா பொறுமை, முடியும் என்ற ஆற்றல், வெல்லற்கறிய மனவெழுச்சி மற்றும் ஞானத்திலுமே அடங்கியுள்ளதாக எனக்குத் தோன்றுகிறது. ...மனித உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்து... பாட்டாளிவர்க்க ஜனநாயகத்தின் உண்மையான புரிதலை விரிவுபடுத்துவதற்காக கம்யூனிச சர்வதேசியவாதத்திற்காக சோவியத் யூனியனை இட்டுச் சென்றதன்மூலம், ரஷ்ய வரலாற்றிலும் உலக மக்களிடமும் ஒரு புதிய தொன்மையான காலத்தையையே படைத்துவிட்டார். ’( மாஸ்கோ டைரி).

மற்றொரு புகழ்பெற்ற மனிதநேயவாதியான ஜார்ஜ் பெர்னாட் ஷா கூறியதாவது, “ஸ்டாலின் ஒரு தனிச்சிறப்புமிக்க அனுபவம் வாய்ந்த ராஜதந்திரி. அவரோடு ஒப்பிடுகையில் மேற்கத்திய சக்திகளின் ஆட்சியாளர்கள், வெற்று வார்த்தைகளையும், போலி வரலாறுகளையும், காலாவதியாகிப் போன பழைய நடைமுறைகளையும் வைத்துக் கொண்டிருக்கும் தானியங்கி தீய அமைப்போடு தொங்கிக்கொண்டு, பார்ப்பதற்கு வரிசையாய் நிற்கும் நிலையற்ற உருவங்களுடைய தேய்ந்து போன மெழுகுசிற்பங்கள் போல் உள்ளனர்.’(G B Shaw, H Piarson — A postscript, Colynis, 1951)

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பின்வருமாறு ஸ்டாலினுக்கு புகழாரம் செலுத்துகிறார்: “போருக்குப் பிந்தைய ஐரோப்பாவில் ஒரே ஒரு சக்திதான் செய்துபார்க்கத்தக்க திட்டத்தைக் கொண்டுள்ளது, அந்த சக்தி சோவியத் யூனியனே. அடுத்த சில பத்தாண்டுகளுக்கு ஐரோப்பிய தேசங்களின் எதிர்காலத்தை தன் கையில் வைத்திருக்கும் ஒரு மனிதன் இருக்கிறார் என்றால் அம் மனிதர் மார்ஷல் ஸ்டாலினே ஆவார். (சிங்கப்பூரிலிருந்து ஒலிபரப்பான வானொலி உரை, சங்கரி பிரசாத் பாசு எழுதிய ‘சுபாஷ் சந்திராவும் தேசிய திட்டமும்’ என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது).

போர் முழுவீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மரணப் படுக்கையில் இருந்த ரவீந்திரநாத் தாகூர் “ரஷ்யாவைப் பற்றிய செய்திகளை எனக்குக் கூறுங்கள்” என்று கேட்டார். ஜெர்மனியின் தாக்குதலை செஞ்சேனைகள் முறியடித்து விடும் என்று கேட்ட மாத்திரத்திலேயே அவரது முகத்தில் மலர்ச்சி தோன்றியது, “நிச்சயம் அதுதானே நடக்கும், அவர்களால் மட்டும்தான் இதைச் செய்ய முடியும், அவர்கள் வெல்வார்கள்” என்று கூறினார்.(Kabikatha — Prasanta Chandra Maholanobish, Visvabharati Patrika, 1350 Bengali Year)

போர் நடைபெற்றபோது மாஸ்கோவிற்கான அமெரிக்க தூதராக இருந்த அவெரெல் ஹரிமன் கூறியதாவது : “போர்த்தலைவர் ஸ்டாலின் மிகவும் பிரபலமானவர், அதோடு அவர்தான் சோவியத் யூனியனை ஒன்றாக வைத்திருந்தார் என்பதில் எந்த சந்தேகமும் இருக்க முடியாது. இதை வேறு யாரேனும் செய்திருக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. நெருக்கடி காலத்தின் தேசத் தலைவர் ஸ்டாலின் மீது நான் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறேன் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன் – ஒரே மனிதர் இத்தகைய வேறுபாட்டை ஏற்படுத்த முடிந்த வரலாற்று சிறப்புமிக்க தருணம் அது. விவரங்களை கிரகிப்பதிலும் அந்த விவரங்களின்படி செயல்படுவதிலும் நுட்பமான திறன் பெற்றிருந்தார். ஒட்டுமொத்த போர் இயந்திரங்களின் தேவைகளை குறித்தும் அவர் மிகவும் எச்சரிக்கையாக இருந்தார். இவையெல்லாம் அதிகாரத்துவவாதியின் குணாம்சங்கள் அல்ல, மாறாக மிகப்பெரிய திறன்கொண்ட, செயலூக்கமிக்க போர்த் தலைவரின் குணாம்சங்களாகும்.

முன்னாள் அமெரிக்கத் தூதர் ஜோசப் டேவிஸ் ’மிஷன் டு மாஸ்கோ’ என்ற தனது நூலில் எழுதியிருப்பதாவது, “ரஷ்யாவுக்குள் ஹிட்லர் நுழைந்தபோது அங்கு காட்டிக்கொடுப்பவர்கள் எவரையும் பார்க்க முடியாதது ஏன்? என்ற இந்த கேள்வியைப் பலர் என்னிடம் கேட்டனர். அப்படிப்பட்டவர்களை நீண்ட காலத்திற்கு முன்பே ஸ்டாலின் கண்டறிந்து வேரறுத்துவிட்டார் என்று நான் பதிலுரைத்தேன். துரோகம் செய்தவர்களை பகிரங்க பொது நீதிமன்றங்களில் விசாரித்து, அதுவும் அமெரிக்க தூதர் உள்ளிட்ட வெளிநாடுகளையும் சேர்ந்த புகழ்பெற்ற மனிதர்களின் முன்னிலையில் விசாரித்து, அவர்களது குற்றம் நிரூபிக்கப்பட்டால் உடனே கடுமையான தண்டனைகளை ஸ்டாலின் வழங்கினார்.” எனவேதான் ஒட்டுமொத்த உலகமும் அவரை மிகவும் உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்த்தது. உலக கம்யூனிஸ்டுகள் அவரை தங்களது ஆசானாக ஏற்றுக்கொண்டனர், கம்யூனிஸ்ட் அல்லாத ஜனநாயக எண்ணம் கொண்ட மனிதநேயவாதிகள் அவரை இச்சகாப்தத்தின் நாயகன் என்று அழைத்தனர். ஆனாலும் கூட அவர் தன்னைப் பற்றி கூறுகையில் “நான் லெனினின் சீடன், அவரின் உகந்த சீடனாக இருக்கவேண்டும் என்பதே என் ஆசை’ என்று கூறினார். அவரைப் பொறுத்தமட்டில் அப்படித்தான் அவர் அறியப்பட்டார். இரண்டாம் உலகப்போரில் செஞ்சேனை ஈட்டிய வெற்றியின் பெருமைகளை ஸ்டாலின் அபகரிக்க முயற்சிக்கிறார் என்று திருத்தல்வாத குருச்சேவ் குற்றம் சாட்டினார். ஆனால் யதார்த்தம் முற்றிலும் மாறாக இருந்தது. போர் முடிந்ததும், அதன் வெற்றி அணிவகுப்பு மரியாதையை ஸ்டாலின்தான் ஏற்றுக்கொள்வார் என்று அனைவரும் நினைத்துக் கொண்டிருந்த வேளையில், அவ்வணிவகுப்பு மரியாதையை மார்ஷல் ஜுக்கோவை ஏற்றுக் கொள்ளுமாறு ஸ்டாலின் கேட்டுக்கொண்டார். அந்த வெற்றி உரையில் ஸ்டாலின் கூறியதாவது, “நமது வெற்றியின் அர்த்தம், முதலில் நமது சோவியத் சமூக அமைப்பு வெற்றிவாகை சூடியுள்ளது, போர்க்களம் எனும் தீப்பிழம்புச் சோதனையில் சோவியத் சமூக அமைப்பு வெற்றிகரமாகத் தேர்ச்சி பெற்று அதன் உயிரோட்டத்தை கேள்விகளுக்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளது... போரின் முன்னேற்றத்தில் நமது தாய்நாடு, நமது மக்களின் மாபெரும் சோசலிச சாதனைகளை உயர்த்திப் பிடிக்கும் வல்லமையுள்ளதும் சோவியத் யூனியனின் அரசு நலன்களைப் பாதுகாக்க வல்லதுமான முதல்தர நிரந்தர ராணுவத்தைப் பெற்றுள்ளது... சோவியத் யூனியன் 4 ஆண்டுகள் போர்புரிந்து ஈடிணையற்ற அளவிலான பெரும் இழப்புகளைச் சந்தித்தபோதிலும் நமது சோசலிசப் பொருளாதார அமைப்பு வலுப்பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த வெற்றி மாபெரும் போல்ஷ்விக் கட்சியால் உத்வேகமூட்டப்பட்டு வழிகாட்டப்பட்ட நமது நாட்டின் தொழிலாளர்கள், கூட்டு விவசாயிகள், சோவியத் அறிவுஜீவிகள், பெண்கள் மற்றும் இளைஞர்களின் வீரஞ்செறிந்த முயற்சியின் விளைவாகும்.”

### பாசிச ராணுவத்திற்கு எதிராக செஞ்சேனை பெற்ற வெற்றி உலகம் முழுவதும் விடுதலைக்கான போராட்டங்களை கிளப்பிவிட்டது

இது பாசிசத்திற்கு எதிரான, இல்லை. பாசிச ராணுவ பலத்திற்கு எதிரான பிரம்மாண்டமான வெற்றியாகும். பேரழிவு நாசகர தீய பாசிச சக்திகளின் பிடியில் சிக்கிவிடாமல் ஒட்டுமொத்த உலகையும் இப்படித்தான் ஸ்டாலினும் செஞ்சேனையும் துணிச்சல்மிக்க சோவியத் மக்களும் காப்பாற்றினர். இரைதேடி வேட்டையாடி வந்த பாசிஸ்டுகளிடமிருந்து இந்த போற்றத்தக்க வெற்றியைக் கைப்பற்றுவதற்கு **2.6** மில்லியன் சோவியத் மக்கள் தங்கள் இன்னுயிரை இழக்க வேண்டியதாயிற்று. இதில் செஞ்சேனையின் தீரமிக்க சிப்பாய்களும் சோவியத் (போல்ஷ்விக்) கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி செயல்வீரர்களும் தலைவர்களும் பார்ட்டிசன் குழுக்களின் உறுப்பினர்களும் சாமானிய சோவியத் மக்களும் சோசலிசத்தையும் ஒட்டுமொத்த உலகையும் காப்பாற்ற வேண்டும் என்பதில் உறுதிபூண்டிருந்தனர். இந்த போரில் சோவியத் யூனியன் சந்தித்தை போன்ற இத்தனை உயிர்ப்பலிகளையும் சொத்து வளங்கள் இழப்பையும் வேறு எந்த நாடும் சந்திக்கவில்லை. வெற்றியை நாங்கள்தான் கொண்டு வந்தோம் என்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் மார்தட்டுகின்றனர். அமெரிக்க சினிமா கம்பெனிகளும் அதையே வலியுறுத்தி படம் எடுக்கின்றன. ஆனால் அவற்றில் எள்ளளவும் உண்மை இல்லை. பேர்ல் துறைமுகத்தில் நிகழ்ந்த குண்டுவீச்சைத் தவிர, அமெரிக்கா பெரிய இழப்பு எதையும் சந்திக்கவில்லை. மாறாக உலக சந்தையில் அவர்களுக்கு பெரும் போட்டியாளர்களாக இருந்த பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் போரினால் பாதிக்கப்பட்டதால், அவர்களது வீழ்ச்சியைப் பயன்படுத்தி அமெரிக்கா வளர்ந்தது. மறுபுறம், சோவியத் யூனியனின் வெற்றியானது கம்யூனிசத்தின் கௌரவத்தையும் மரியாதையையும் உயர்த்தியதோடு உலகப் புரட்சியை துரிதப்படுத்துவதற்கு உலகம் முழுவதும் உள்ள உழைக்கும் வர்க்கத்தை மேலும் தூண்டியது. காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் தேசிய விடுதலை இயக்கங்கள் பிரம்மிக்கத்தக்க ஊக்கம் பெற்றன. பெர்லினை நோக்கிய செஞ்சேனை வெற்றிப் பேரணியின் போக்கில், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பெரும்பாலானவற்றில் சோசலிசம் ஸ்தாபிக்கப்பட்டது. மாபெரும் மாசேதுங் தலைமையில் சீனப் புரட்சியின் வெற்றி எட்டும் தூரத்தில் இருந்தது. உலகக் கம்யூனிஸ்ட் இயக்கம் பிரம்மாண்டமான உத்வேகம் பெற்றது. அனைவரது

தொடர்ச்சி 8ம் பக்கம்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 26th June 2015

**பாட்டாளி சிந்தனை**

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

## பாசிசத்தை சோசலிசம் வெற்றி கொண்ட 70வது ஆண்டு விழா

# பாசிசத்திற்கு எதிராக சித்தாந்த–அரசியல்–கலாச்சாரப் போராட்டத்தை தீவிரப்படுத்துவீர்

*7ம் பக்கத் தொடர்ச்சி*

*இதயங்களிலும் ஸ்டாலினின் பெயர் ஆழமாகப் பதிந்துவிட்டது. ஸ்டாலினைக் களங்கப்படுத்த முயற்சிப்பவர்கள் வரலாற்றில் அவர்களே களங்கப்பட்டுவிடுவர். அதே நேரத்தில் ஸ்டாலின் புகழ் இம்மியளவும் குறையாது என்பதோடு மட்டுமல்லாமல் ஒரு கம்பீரமான கம்யூனிஸ்ட் தலைவராக, ஒரு மாபெரும் குணசீலராக நமது இதயங்களில் என்றென்றும் வாழ்வார்.*

### திருத்தல்வாத சதி: ஸ்டாலினை சிறுமைப்படுத்தி கம்யூனிசத்தின் பயணத்தைத் தடுத்தது

*ஆனால் அதற்குப் பின்பு வரலாற்றின் போக்கில் வெவ்வேறு திருப்பங்கள் ஏற்பட்டன. **1953**இல் ஸ்டாலினின் மறைவிற்குப் பின்பு, குருச்சேவ் தலைமையிலான நவீன திருத்தல்வாதிகள் சோவியத் யூனியனின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினர். உலக ஏகாதிபத்திய–முதலாளித்துவத்தின் துணையோடும் உதவியோடும் அவர்கள் சோசலிசத்தின் தூண்களை திட்டமிட்டு தகர்க்கத் தொடங்கினர். அதோடு எதிர்புரட்சியை நோக்கிய பயணத்தை தொடங்கினர். இறுதியில் எதிர்புரட்சியின் மூலமாக **1990**களில் சோவியத் சோசலிசம் வீழ்த்தப்பட்டது. இதைச் சாதிப்பதற்காக, ஸ்டாலின் மீது களங்கப் பிரச்சாரத்தை நடத்தி, அவரது அத்தாரிட்டியை சிறுமைப்படுத்தமுயன்றனர். அதே நேரத்தில், இதனுள் பொதிந்திருக்கும் அபாயத்தை சுட்டிக் காட்டி, உலகத்திற்கு குறிப்பாக கம்யூனிஸ்டுகளுக்கு, எச்சரிக்கை செய்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச்செயலாளரும் இக்காலகட்டத்தின் தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளர்களுள் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் ஒருவர் மட்டுமே குரல் எழுப்பினார். அவர் தெள்ளத் தெளிவாகக் கூறியதாவது, "ஸ்டாலினின் பெயரை இருட்டடிப்பு செய்வது என்பது வேறுவழியின்றி அவரது அத்தாரிட்டியையே நீக்கிவிடுவதில் போய் முடியும், அதன் விளைவாக மார்க்சிசம்–லெனினிசத்தின் இன்றைய புரிதலான, லெனினிசம் பற்றிய அவரது விரித்துரைக்கப்பட்ட விளக்கத்தையும் மறுதலித்துவிடும். எதிர்காலத் தலைமுறையினருக்கு, மார்க்சிசம் லெனினிசத்தின் புரட்சிகர உற்சாகத்தைப் பாதுகாப்பதற்காக டிராட்ஸ்கியவாதிகள் மற்றும் புக்காரினியவாதிகளுக்கு எதிராக ஸ்டாலின் அவர்கள் நடத்திய ஓய்வொழிவற்ற போராட்டத்தின் பக்கங்கங்கள் இருட்டடிப்பு செய்து மறைக்கப்பட்டுவிடும். அதோடு அவர்கள் சித்தாந்தரீதியாக வார்த்தெடுக்கப்படுவதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விடும். இது அனைத்துவிதமான எதிர்புரட்சி கருத்துக்களையும் மார்க்சிசம்–லெனினிசத்திற்குள் புகுத்தி கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சித்தாந்த அடித்தளத்திற்கு பின்னடைவை ஏற்படுத்திவிடும். சுருக்கமாகச் சொன்னால் இது லெனினின் மகுடத்தையே சிதைத்துவிடும். (சிப்தாஸ் கோஷ், தேர்வு நூல்கள் பாகம் 1, பக். 85–86)*

*இன்று ரஷ்ய மக்களும் அதேபோன்று உலகின் பிற பகுதிகளைச் சேர்ந்த, குறிப்பாக கிழக்கு ஐரோப்பாவின் சோசலிச நாடுகளாக இருந்த நாடுகளிலும் உள்ள மக்கள் மீண்டும் லெனின் – ஸ்டாலின் படங்களை உயர்த்திப் பிடிப்பது வரவேற்கத்தக்க அறிகுறியாகும். ஆனால் முதலாளித்துவ–எதிர்ப்பு சோசலிசப் புரட்சி மூலம் சோசலிசத்தை மீண்டும் கொண்டுவருவதற்கு சரியான புரட்சிகர தலைமையின் கீழ் ஒன்றுபட்ட விழிப்புணர்வுமிக்க இயக்கங்களை வளர்த்தெடுத்து உக்கிரப்படுத்துவது அவசியமாகும். அதே நேரத்தில் ஹிட்லர்–முசோலினி–டோஜோ அச்சுக்கூட்டணியை போரின்மூலம் தோற்கடித்துவிட்டதோடு பாசிசம் முற்றுப்பெறவில்லை என்ற பாடத்தையும் நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும். பாசிசம் என்பது வெறுமனே அப்பட்டமான ராணுவ சர்வாதிகாரம் மட்டுமல்ல. மார்க்சிச–லெனினிச பட்டறையின்படி தோழர் சிப்தாஸ் கோஷ் கூறியதாவது, "பாசிசம் என்பது புரட்சி வராமலிருப்பதற்காக முதலாளித்துவம் மேற்கொள்ளும் முன்தடுப்பு நடவடிக்கையாக வரலாற்றுரீதியாக ஒருநிலைக்குட்படுத்தப்பட்ட எதிர்புரட்சி வடிவமாகும்." தற்போதிருக்கும் அமைப்பிற்கு எதிராக பெருகிவரும் அதிருப்தியில் உள்ள மக்களைக்கண்டு நெருக்கடியில் சிக்கியுள்ள, முற்றிலும் குழப்பத்தில் நம்பிக்கையிழந்த முதலாளித்துவம் வீழ்ந்துவிடுவதிலிருந்து காப்பாற்றுவதற்கான திட்டமே ஆகும்...' (தேர்வு நூல்கள், தொகுதி 2, பக் 55). முதலாளித்துவம் கிழடுதட்டி மரணப்படுக்கையில் இருக்கும் இன்றைய கட்டத்தில், அனைத்து முதலாளித்துவ–ஏகாதிபத்திய நாடுகளிலும் – அது முன்னேறியதோ அல்லது பின்தங்கியதோ – பாசிசம் என்பது பொதுவான அம்சமாக இருக்கிறது என்று விளக்கியுரைத்தார். பாசிசம் என்பது எந்த வடிவத்திலும், பாராளுமன்ற ஜனநாயகத்தை வைத்துக்கொண்டே கூட வரலாம் என்று எச்சரித்த அவர் 'தத்துவம் மற்றும் கலாச்சார களத்தில் நவீன விஞ்ஞானத்துடன் ஆன்மீகவாதத்தை ஒன்று கலக்கும் ஒரு விநோதக்கலவையே பாசிசம் 'என்று வரையறுத்தார். (தேர்வு நூல்கள் பகுதி 4, பக். 14). மேலும் அவர் விரிவாகக் கூறுகையில், "பூர்ஷ்வாக்கள் தங்களது பொருளாதாரத்தை வளர்த்துக்கொள்வதற்கும் பாசிச அரசின் ராணுவ பலத்தை பெருக்கிக்கொள்வதற்கும் விஞ்ஞானத்தின் தொழில்நுட்ப அம்சங்களை ஒருபுறம் பயன்படுத்திக்கொள்கின்றனர். மற்றொரு புறம் அனைத்துவிதமான விஞ்ஞானத்திற்குப் புறம்பான மத வெறிகளையும், அனைத்துவிதமான கருத்துமுதல்வாத மற்றும் ஆன்மீகவாத ஏமாற்று வித்தைகளையும் பரப்புகின்றனர். இன்றைய சமுதாயத்தில் சுரண்டல் முதலாளித்துவ அமைப்பால் விளையும் அனைத்து தீமைகளால், மக்கள் படும் இன்னல்களுக்கு ஆன்மீகவாதத்தில் தான் தீர்வு என்று திசைதிருப்புகின்றனர். அதோடு தேசப் பண்பாடு, பாரம்பரியம் என்ற பெயரில் வெறியுணர்வையும் தூண்டுகின்றனர்." இந்தியாவில் இன்று நாம் காணும் காட்சி இதற்கு பளிச்சிடும் உதாரணமாக உள்ளது.*

### புரட்சியை வரவிடாமல் தள்ளிவைப்பதற்காக நடத்தப்படும் பாசிசச் சதியை முறியடிப்பீர்

*எனவே, இரண்டாம் உலகப் போரில் பாசிசத்திற்கு எதிரான வெற்றியின் 70 வது ஆண்டைக் கொண்டாடுகின்ற வேளையில் நாம் ஒன்றை மறந்துவிடக்கூடாது. ஜெர்மன் – இத்தாலி – ஜப்பான் என்ற பாசிசக் கூட்டணியை ராணுவத்தால் தோற்கடித்துவிட்டபோதிலும் பாசிசத்திற்கெதிரான போராட்டம் முடிந்துவிடவில்லை என்பதை நாம் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும். நீண்ட காலத்திற்கு முன்பே தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் சுட்டிக் காட்டியபடி, பொருளாதார மையப்படுத்துதல், அதிகப்படியான அரசியல் அதிகாரம் முதலாளித்துவவாதிகள்–ஏகாதிபத்தியங்களின் ஒரு சிலரது கைகளில் குவிதல்கள், நிர்வாகத்தில் இலகுதன்மையற்ற இறுக்கமான பிடிவாதம், கலாச்சாரப் படைமுறைப்படுத்துதல், அரசின் நலன்களை ஆளும் ஏகபோகங்களின் நலன்களோடு ஐக்கியப்படுத்துதல், இதன் மூலம் அரசை அவர்களுக்கு அடிவருடியாக மாற்றுதல் போன்ற பாசிசத்தின் பிரத்யேகமான கூறுகள் இன்று அனைத்து முதலாளித்துவ–ஏகாதிபத்திய நாடுகளிலும் அப்பட்டமாக, வெவ்வேறு அளவு கோணங்களில் நாம் பார்க்க முடியும். இன்று அனைத்து முதலாளித்துவ–ஏகாதிபத்திய நாடுகளிலும் பாசிசம் இப்படிப்பட்ட அவலமான தனது முகத்தை உயர்த்தும் வேளையில், மிகக் கடுமையான பொருளாதார அடக்குமுறை மற்றும் நிதி சுரண்டல், கடுமையாகப் போராடிப் பெற்ற அனைத்து ஜனநாயக உரிமைகளையும் மக்களிடமிருந்து பறித்தல், எதிர்ப்புக் குரலை நசுக்குதல் அதிலும் குறிப்பாக பகுத்தறிவு சிந்தனையை அழித்தல், பிரச்சினைகளுக்கான காரணங்களை விஞ்ஞானபூர்வமாகப் பார்ப்பதென்ற எண்ணப்போக்கை குருட்டு நம்பிக்கை மற்றும் மதவெறிவாதத்தின் துணைகொண்டு பார்ப்பதற்கு திசைதிருப்புதல், ஒழுக்கநெறி–கலாச்சார–அறநெறி அடிப்படையை ஒழித்து, அதன்மூலம் புரட்சிகரக் கிளர்ச்சியில் மக்களை ஈடுபடவிடாமல் தடுத்தல் போன்றவற்றில் ஆளும் முதலாளித்துவவாதிகளும்–ஏகாதிபத்தியவாதிகளும் ஈடுபட்டுள்ளனர். இத்தகைய சூழலில் அவர்களது இந்த நயவஞ்சகச் சதியை முறியடிக்க பாசிசத்திற்கு எதிரான உக்கிரமான சித்தாந்த–கலாச்சார–அரசியல் போராட்டத்தை மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மா சே துங், சிப்தாஸ் கோஷ் ஆகியோரின் மதிப்புமிக்க போதனைகளின் அடிப்படையில் உக்கிரமாக நடத்த வேண்டியது மிகவும் அவசியமாகிறது.*



மே **5, 2015** அன்று நிலம் கையகப்படுத்தும் அவரச சட்டத்தை எதிர்த்து புதுதில்லியில் நடைபெற்ற கூட்டு பேரணியில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர், தோழர் சத்தியாவன் உரையாற்றுகிறார்

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் , அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : அய்யனார் ஆப்செட் எண் 10, சுப்பாராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்*

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucic.in